JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா



அனுதினமும்

2014 பெப்ரவரி

## ஆவிக்குரிய எழுப்புதலின் ஆண்டு 2014

**எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.**

- ஏசாயா 60:1-

# கொடுங்கள்! அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்!

## தினமன்னா தியானங்களுக்கு பெப்ரவரி மாத பங்காளர் லெபனானிலிருந்து...



அன்பார்ந்தவர்களே! 2014 இரண்டாம் மாதத்திற்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இனிதான வாழ்த்துக்கள் இந்த வருடத்தில் ஆத்மீக வாழ்வில் கர்த்தர் உங்களை மேம்படுத்தி இப் பூமிக்குரிய ஆசீர்வாதங்களிலும் நிரப்பும்படியாக பிரார்த்திக்கின்றேன். இவ்வருடத்திற்குள் நீங்கள் கால் வைக்கும் அனைத்து வழிகளிலும் கர்த்தரின் சமூகம் முன் சென்று சகல தடைகளும் நீங்கப் பெற்று, கைக்கிரியைகள் சகலவற்றிலும் கர்த்தரின் ஆசீர்வாதத்தினால் நிறைந்திருக்கும்படியாகவும், உங்கள் வாழ்வில் ஒரு பெரிதான முன்னேற்றத்தைக் காணும்படியாகவும் வாழ்த்துகின்றேன்.

எங்கள் தேவனின் மகா பெரிய இரக்கத்தினால் ஜீவ மன்னா தின தியானங்கள் 28வது வெளியீடுகள் வரை பொருளாதாரத்தில் எந்தவொரு நபரினதும் முழு ஒத்துழைப்பும் பெறாவண்ணம் $2\frac{1}{2}$ வருடங்கள் உரிய நேரத்தில் உங்கள் கரங்களுக்களிக்க எம்மால் முடிந்தது. அதற்கு என் தேவனுக்கே முழு கௌரவமும், மகிமையும் உரித்தாகட்டும். தேவனின் அளவற்ற அநுக்கிரகத்தின் காரணமாக சென்ற மாதம் தின மன்னா தியானங்களுக்கான முழுச் செலவையும் பிரான்ஸ் தேசத்தில் அப்போஸ்தலிக்க சபையின் சகோதரரான ரொஹான் பெரேரா என்பவர் முழுமையாக ஏற்றுக் கொண்டு ஒத்தாசை புரிந்தார். மேலதிக எவ்வித பண உதவியும் இல்லாமல் தேவ சபை விசுவாசிகளிடம் பெறும் காணிக்கைகளிலும், தசம பாகத்திலும் மாத்திரமே முன்னோக்கிக் கொண்டு வந்த இந்த ஊழியத்தில் விஷேசமாக ஜீவ மன்னா தினதியானங்களின் காரியங்களுக்கு அது பெரிய உதவியாயிற்று. ஆகையால் அவருக்கு மீண்டுமாக எனது மனப்பூர்வமான நன்றிகள்.

அன்பார்ந்தவர்களே! லெபனானில் வசிக்கும் **M.R.C.** வியாபார நிறுவனத்தின் உயர் அதிகாரியான சகோதரி ரஞ்சனி என்பவர் 2014 வருடத்தில் பெப்ரவரி மாதத்திற்கான தின தியானங்களுக்கான முழுச் செலவையும் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது இந்த மாபெரும் ஒத்தாசைக்காக என் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

அவர் செய்த இந்த மகத்தான காரியம் தலைமைப் போதகர் ஏ.ஜே.ஜோசப் ஆகிய எனக்கு அல்லது இயேசு கை விடார் சபைக்கு செய்ததொன்றல்ல. மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று கூறப்பட்ட தேவ வசனத்தின்படி அவர் அதைச் செய்தது தேவ இராஜ்யத்திற்கேயாகும். அவருக்கான பலன் ஏற்ற காலத்தில் அவருக்கு கிடைக்கச் செய்வாரென்பது எனது விசுவாசமாகும்.

தேவ பிள்ளைகளே! இச் செய்தியை வாசிக்கும் யாராகவிருந்தாலும் எதிர்காலத்திலும் இந்த ஆத்துமீக காரியத்திற்காக இவ்வண்ணமாக ஒத்தாசை அளிப்பீர்களாயின் உங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கு பிரயோஜனமான மற்ற வெளியீடுகளை மேலதிகமாக்கிக் கொள்ளும்படியாக உங்கள் உதவி ஒத்தாசை வழங்குவதில் முந்திக் கொள்ளுங்கள். உங்கள் ஒத்தாசை எங்களுக்கு மிகுந்த பெலனாயிருக்கும் என அறியத்தருகின்றேன்.

**தேவ இராஜ்யத்திற்காக மனமகிழ்ச்சியோடு மனமுவந்து விதைப்பீர்களாயின் பலனை அனுபவிப்பீர்கள் என்பதில் சந்தேகமேயில்லை.**

மகிமை இயேசு ராஜனுக்கே

# ஆசிரியர் உரை

## 2014 எழும்பிப் பிரகாசிப்போம் !

தேவ பிள்ளைகளே,

2014 வருடத்தில் ஜீவ மன்னா தின தியானங்களுக்கூடாக இலங்கையில் ஆவிக்குரிய நிலையில் இன்னுமாக உயர்ந்து எழும்பிப் பிரகாசிக்க தேவன் தீவிரமாக கிரியை செய்யப் போகிறார். தேவனுக்கே சகல கனம், துதி, மகிமை உண்டாகட்டும். இன்னுமாக தியானங்களை தயாரித்து அவைகளை சரியான நேரத்தில் உங்களுக்கு பெற்றுக் கொடுக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி ஒத்தாசை, புரிந்து உதவிகளை வழங்கிய எனது ஊழியக்காரப் பிள்ளைகள் அனைவருக்கும் என் உள்ளங்கனிந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

தேவ பிள்ளைகளே! இந்த ஜீவ மன்னா தின தியானங்கள் இன்னும் அதிகச் சுவாரசியமாகவும், உங்களுக்கு அதிகமான ஆத்மீக பலன்களைக் கொடுக்கும் படியாகவும், உங்கள் ஆத்மீக ஆலோசனைகள் அல்லது கருத்துக்கள் எதுவாயிருப்பினும் எமக்கு எழுதும்படியாக மன்னா வாசகர்களான உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு எங்கள் சபைக்கூடாக வெளியிட்டுள்ள நற்செய்தி CD தட்டுகள், மைக்ரோ சிப் போன்ற ஆத்மீக தயாரிப்புகளுக்கு மேலதிகமாக நீங்கள் வசிக்கும் பிரதேசத்திற்கு பொருத்தமான புதிய படங்களைக் கொண்டு வெளியிடுகின்ற அட்டைப் படங்களைக் குறித்ததான ஏதாவது கருத்துக்களும் உங்கள் ஆலோசனைகளும் இருப்பின் எங்களுக்கு எழுதி அனுப்ப தாமதப்படாதீர்கள், மறந்து விடாதீர்கள்.


அன்பார்ந்தவர்களே! அப்படியே ஜீவ மன்னா தின தியானங்களுக்கூடாக தேவ பிள்ளைகளின் வாழ்க்கையில் எம்மால் நினைத்துப் பார்க்க முடியாத பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதற்கான சாட்சிகள் எம்மிடம் அநேகமுண்டு. அத்தோடு இயேசுகிறிஸ்துவைக் குறித்து மிக குறைந்த அறிவைப் பெற்றிருந்த பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் கூட இதற் கூடாக தங்கள் அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள பெரிதான கிருபையை பெற்றுக் கொண்டோமென மன்னா விமர்சனக் கடிதங்களுக்கூடாக அறிந்துக் கொண்டு வருகின்றோம். ஆகையால் இவ்வருடத்தில் தின மன்னா தியானங்களை அதிகமதிகமாக மற்றவர்களுக்கு கொடுக்க முயற்சியோடு உற்சாகமாக செயல்படுங்கள். உங்களுக்கு முடியுமானால் மாதத்தில் ஒரு புதிய முகவரியை அனுப்பும் வேளையில் அவர்களின் விருப்பத்தோடு, அனுமதியோடு எங்களுக்கு அனுப்ப மறந்து விடாதீர்கள். இயேசுகிறிஸ்துவை உண்மையாகவே நேசிக்கும் உங்கள் அனைவருக்கும் அளவில்லா தேவ அநுக்கிரகம் கிடைப்பதாக.

ஆவிக்குரிய மனிதர்களே !
இயேசுவோடு பரிசுத்த ஸ்தலத்தில்
இணைந்துநிற்க
இடையில் இருக்கும் திரைகளை அகற்றி
இயேசுவுக்காய் எழும்பிடுங்கள் !

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

# மன்னாவின் பலனைக்கு குறித்து அட்டவணை தயாரித்து எமக்கனுப்புங்கள்!



அன்பார்ந்தவர்களே! இம்முறை தினமன்னா தியானங்களையும் (29வது வெளியீடு) இவ்வண்ணமாக இடை நிறுத்தாது, முன்னோக்கிக் கொண்டுச்சென்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் பணம் அளித்து உதவி செய்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அப்படியே எம்மை மறவாது மன்னா விமர்சனக்கடிதங்களை அனுப்பிய வாசகர்களுக்கும், உங்கள் வாசக கட்டணங்களை எங்களுக்குக் கிடைக்கச் செய்து மிக அருமையான ஒத்தாசைகளை நல்கிய அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

இன்னுமாக இப்படியான ஆத்மீக காரியத்திற்காக உங்கள் ஒத்துழைப்பு, உதவிகள் முழுமையாக எங்களுக்களிக்க இயலுமாக விருந்தும் நீங்கள் அதை தவிர்த்துக் கொண்டீர்களாயின் இந்த யுகத்தின் முடிவு மிக சமீபமாக இருக்கின்றமையால் தேவ இராஜ்யத்திற்கென்று உங்களுக்கு ஏதாவதொன்றைச் செய்ய எண்ணததோன்றுமானால் எங்கள் ஜீவ மன்னாவை முன்னோக்கிக் கொண்டு செல்லும்படியாக உங்கள் உதவி ஒத்தாசைகளை முழு இருதயத்தோடு நல்குமாறு கேட்கின்றேன். அவைகள் அனைத்தும் தேவன் முன்னிலையில் மிக பிரியமாயிருக்கிறது என்பதனை கருத்திற் கொண்டு நீங்கள் அனைவரும் அதீதீவிரமாக, உற்சாகமாய் செயற்படுமாறு அன்பு நிறையுள்ளத்தோடு கேட்டுக் கொள்கிறேன்.



இதனைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல ஆத்மீகமாக தயாரித்துக் கொள்ளவும். எங்கள் தேவனின் கருணையை இன்னுமாக எங்களுக்கு தரும்படியாக உங்கள் ஜெப நேரங்களில் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும்படியாக உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது ஜீவ மன்னா தின தியானங்கள் 28ம் வெளியீட்டை உங்கள் கரங்களில் கிடைக்கப் பெற்றிருக்கின்றீர்கள். தின மன்னா தின தியானங்களுக்கூடாக நீங்கள் பெற்ற ஆத்மீக பலன்களைக் குறித்து சுருக்கமாக எழுதி அறிவியுங்கள். நீங்கள் எங்களுக்காக 5 ரூபா செலவழித்து ஒரு கடிதம் அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறோம். அத்தோடு தகுதியான விமர்சனக்கடிதங்களை ஜீவ மன்னா தின தியானங்களில் வெளியிட எதிர்பார்க்கின்றோம். உங்கள் அனைவருக்கும் இயேசு துணை புரிவாராக!

**உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில்**

**நாளுக்கு நாள் ஆத்மீக வளர்ச்சியைப் பெற்று**

**முன்னோக்கி பயணியுங்கள்!**





# 2014 வருடத்தில் விஷேச ஜெப விண்ணப்பங்கள்



(01) தேவ சபைகள் வளர்ச்சியடைய வேண்டும்.

(02) தேசத்திற்கு விரோதமாய் கிரியை செய்கிற சத்துருவின் தடைகளை முறியடித்து தேவ சபையிலே தேவ சித்தம் நிறைவேற வேண்டும்.

(03) சுகத்தைப் பெற்றுக் கொண்ட வியாதிஸ்தர்கள் எங்களுடைய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட வேண்டும்.

(04) சபைப் போதகரின் அபிஷேகம் வல்லமை பெருக வேண்டும்.


(05) ஜீவ மன்னா நாளிதலும் ஜீவ மன்னா சஞ்சிகையும் ஆவிக்குரியதாக விலையேறப்பெற்றதாக தயாரிக்கப்பட வேண்டும்.

(06) ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் அநுக்கிரகத்தை பெற்றுக் கொள்ள முடியாதபடி எமது தாய் நாட்டின் எல்லையெங்கும் வேதனைப்படும் இலங்கை வாழ் குடிமக்கள் அனைவரும் அவரண்டையில் வந்து ஆறுதலைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்கள் ஏற்பட வேண்டும்.

# கணனி நேரடி ஒளிபரப்பின் மூலம் உங்களுக்கு சுகமும் விடுதலையும்...

அன்பார்ந்தவர்களே! புதிய வருடத்தில் தேவ இராஜ்ஜியத்தின் சுவிஷேச வளர்ச்சிக்காக நீங்களும் பங்காளரராகலாம்.எங்கள் சுகமளிக்கும் ஆராதனை காலை 10 மணிமுதல் இறுதிவரை இணைய தளத்தில் நேரடியாக ஒளிபரப்பாகின்றது. இப்பொழுதும் வெளி நாடுகளிலிருந்து வெளி நாட்டவர்கள் வந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குவைட், இத்தாலி, அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வசிக்கின்ற வெளி நாட்டவர்கள் இந்த நேரடி ஒளிப்பரப்பைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற வேளை இறுதி ஜெபத்தின் போது திரையில் கை வைத்து சுகத்தைப் பெற்றுக் கொள்வதோடு இயேசுகிறிஸ்து தங்களை குணமாக்கியதை எமக்கு சாட்சியாக அறிவிக்கின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! இவ் வருட ஆரம்பத்தில் தேவனுக்கென்று எந்த ஒரு ஊழியமும் செய்யாதிருக்கின்றீர்களா? நீங்கள் அறிந்தவர்களுக்கு இந்த ஒளிபரப்பை அறிமுகப்படுத்துவதோடு, எமது தின மன்னா தியானங்களையும் புதியவர்களுக்கு அறிமுகப்படுத்தி இந்த வருடத்தில் தேவனுக்கென்று ஒரு புதிய ஊழியத்தினை ஆரம்பிக்க முடியும். இவ் வருடத்தில் நீங்கள் ஆத்மீக வாழ்விலும், லௌகீக வாழ்விலும், வளம் பெற்று வாழ்வீர்களாக!










வெப் ஒளிபரப்பின் மூலம் எங்களுடைய நிகழ்ச்சியினை நேரடியாக வீட்டிலிருந்தே காண, எங்களுடைய *www.jesusnf.org* இணையத்தளத்திற்குள் பிரவேசித்து On Live பக்கத்தை க்ளிக் செய்யவும். இன்னுமாக Android (Phone/Tab) Apple (ios), iPhone, iPad இலகுவான கருவிகளின் மூலமாக நேரடியாக தொடர்பு கொள்ள முடியும். தொடர்பு கொள்ள *Ustream* எப்ளிகேஷனை டவுன்லோட் செய்து *jesusneverfails* 'சர்ச்' (Search) பண்ணவும்.

# உங்கள் ஆவிக்குரிய வாழ்வு வளம்பெற இதோ எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்!

## மய்க்றோ சிப்



12 பிரசங்கங்கள், பாடல்கள் 48 Vol 01-05 வரை,இயேசுவின் நாமத்தில் பேய்களைத் துரத்துவோம், ஜெபங்கள் ( சிங்கள மொழியில்) காட்சிகளுடன் பாடல்கள் 20 அடங்கிய "மய்க்றோ சிப்" (இதை கைத்தொலைபேசியில்

## பாடல் கெசற்




- என் உயிர் இயேசுவே Vol 01 - 05 வரை (சிங்களம்)
- Vol 01 (தமிழ் மொழியில்)

## பாடல்கள் Audio, DVD தட்டுகள்







- என் உயிர் இயேசுவே Vol 01 முதல் 05 வரை Audio தட்டு (சிங்கள மொழியில்).
- என் உயிர் இயேசுவே Vol 01 Audio தட்டு (தமிழ்).
- காட்சிகளுடன் கூடிய பாடல்கள் அடங்கிய விஷேசித்த DVD தட்டு.
- ஞாயிறு ஆராதனை, பிரசங்கங்கள் அடங்கிய DVD தட்டுக்கள்.
- சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனைகள் அடங்கிய DVD தட்டு.
- அசுத்த ஆவிகளை துரத்திடுவோம் (சிங்கள, தமிழ் மொழிகளில்) Audio தட்டு.
- வல்லமையின் இரகசியம் VCD தட்டு.
- தெய்வீக சுகம் பெற திரையில் கை வைப்போம். DVD தட்டு (சிங்களம் தமிழ் மொழிகளில்).

ஜீவ மன்னா
பெப்ரவரி 01
சனி

## மரணமெனும் பள்ளத்தாக்கினின்று எம்மை மீட்கின்ற தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 33 – 34

**"நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்;... "** (சங்கீதம் 23:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்** மாதத்தின் முதல் **நாளான இன்று வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எங்கள் இரட்சகரான இயேசுகிறிஸ்து **மரணத்தை வென்று,** மரித்தோரிலிருந்து எழுந்ததைப் போன்று, மரித்தோரை மறுபடியும் **ஜெநிப்பிக்கும் மகா வல்லமை** மிக்க தேவனாவார். இதோ **மரணத்தின்** வழிகளையும், **ஜீவ** வழிகளையும் உங்கள் முன்பாக வைக்கிறேன். என உபாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் தேவனுடைய கரங்களிலேயே ***மரணமும், ஜீவனும்*** இருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ***கலங்காதிருங்கள்!*** ஏனெனில் எமது தலையிலுள்ள மயிரெல்லாம் **எண்ணப்பட்டிருக்கின்றதென பரி:மத்தேயு 10:30** இல் கூறியிருப்பதோடு அவருடைய அனுமதியின்றி தலையில் ஒரு **மயிராவது** கீழே விழுவதில்லை எனவும் **உறுதியாக** கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் தைரியமாயிருங்கள். உலகில் எதிர் நோக்குகின்ற வேதனைகளில் ***மகா கொடியதும் பயங்கரமானதுமான மரண வேதனையினின்றும்*** எம்மை மீட்க எங்கள் தேவன் வல்லமை மிகுந்தவர். **ஏசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு** ஏதுவாகவிருந்த போது யூத இராஜவான அவன் மேல் இரக்கங்கொண்டு அவனது **ஆயுட்காலத்தை 15 வருடம்** நீடிக்கச் செய்து அவரைக் குணப்படுத்திய தேவன் இன்றும் உங்களோடு ஜீவிக்கின்றார். நீங்கள் எல்லா வேளைகளிலும் **முழு மனதோடும், உண்மையோடும், பரிசுத்தத்தோடும்** உங்கள் தேவனின் முன்னிலையில் வாழ்வதோடு, அவரின் **பார்வையில்** சரியானவைகளை மாத்திரமே செய்ய வேண்டுமென்பதை நினைவில் வைத்துக் கொள்வீர்களாக. அதுமாத்திரமின்றி மேற் குறிப்பிட்டுள்ளபடி **சங்கீதம் 23:4**இல் தாவீது இராஜா கூறுகின்றதாவது நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், **பொல்லாப்புக்குப் பயப்படேன்** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! **ஏசாயா 53:5**இல் அவருடைய ***தழும்புகளால்*** குணமாகிறோம் என எழுதப்பட்டுள்ளது. இன்னும் **சங்கீதம் 107:20**இல் அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை ***அழிவுக்குத்*** தப்புவிக்கிறார். என்று எழுதப்பட்டுள்ளது. ***மரண பயம்*** வந்ததா? நீங்கள் தேவ வசனத்தை ***விசுவாசித்து ஜெபியுங்கள்*** தேவன் உங்களோடிருந்து, உங்கள் **உபத்திரவத்திலிருந்து** உங்களை மீட்டுக் கொள்வாராக! தேவ ***பெலத்தோடும், விசுவாசத்தோடும்*** வாழ்வில் **வெற்றி** பெறுங்கள். **இன்று வெற்றிகரமான நாளாகட்டும்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது சர்வ பராக்கிரம தேவனாவீர்கள். நீங்கள் என்னோடிருப்பதனால் மரண வேதனை வந்தாலும் நான் பயப்பட மாட்டேன் தேவனே இன்றும் நீங்கள் என்னோடிருங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." (எசேக்கியேல் 18:4)

ஜீவ மன்னா
பெப்ரவரி 02
ஞாயிறு

## உங்கள் பட்சத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசை செய்யும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 35 – 36

**“அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக;...”** (சகரியா 3:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்** தேவனின் **நன்மையும், கிருபையும்** உங்களை **அனுதினமும் தொடரும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஜீவிக்கின்ற **இயேசுவைக்** குறித்து அறிந்து அவர் பேரில் **விசுவாசம்** வைத்து ஜீவிக்கின்ற நீங்கள் அனைவரும் இன்றும் தேவனின் **சிறகின் நிழலில் அடைக்கலம்** பெறுவது எவ்வளவு மேன்மையானது? ஆகையால் நீங்கள் **ஆசீர்வாதம்** பெற்றவர்கள்.

தேவ பிள்ளைகளே! இவ்வுலகில் **கண்களுக்கு புலப்படாத** இரண்டு வல்லமைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் முதலில் கூற வேண்டியது தேவனின் அளவற்ற **மகா வல்லமை,** இரண்டாவது **சாத்தானின் வல்லமை** கண்களுக்கு புலப்படாத அதாவது **துஷ்ட சேனைகள்** இன்றும் கிரியை செய்கின்றதாக **எபேசியர் 6:12**இன் தேவ வசனத்தில் காணப்படுகின்றது. தேவ வசனங்கள் உண்மையானவைகள். **சத்துருவானவனின்** இருள், இராஜ்ஜியத்தின் செயல்கள் இன்றும் அவ்வண்ணமே செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அப்படியே எம் தேவனின் **மகா வல்லமையானது** இன்றும் கிரியை செய்கின்றது. ஆகையால் **மனம் சோர்வடையாதீர்கள்.** தேவன் உங்கள் **பட்சத்திலிருக்கின்றார்.** மேலே காணப்படும் பிரதான தேவ வசனத்தில் **சாத்தானை** தேவன் கடிந்துக் கொள்வதையே காண்கின்றோம். அந்த தேவ வசனத்தில் பிரதான ஆசாரியனான **யோசுவாவிற்கு** விரோதமாக **சாத்தான்** செயல்பட முனைகின்ற போது தேவன் **சாத்தானை** கடிந்து **யோசுவாவைத்** தப்புவித்தார்.

அன்பார்ந்தவர்களே! **துஷ்ட சேனைகள்** எங்கள் மத்தியில் **அருபியாக** செயல்படுகின்றபடியால் உங்கள் இல்லம், வேலைத்தளம் உங்கள் தேவ சபைக்குள்ளும் **சாத்தான்** பலவிதமாக **சண்டை சச்சரவுகள், வாழ்வில் சோர்வுகளை உருவாக்க முயற்சி** செய்கிறான். ஆனாலும் நீங்கள் **தேவ பயத்தோடு ஜெபம்** செய்து **பரிசுத்த** வாழ்வு வாழ்வீர்களாயின் தேவன் உங்கள் **பட்சமாயிருந்து சாத்தானைக்** கடிந்து கொள்வாராக, அப்பொழுது உங்கள் இல்லத்தில், வேலைத்தளத்தில், தேவ சபையில் உங்களுக்கு சந்தோஷம், சமாதானம், சுகம் கிடைக்கும் சாத்தானின் **கோட்டைகள்** உங்கள் துதியினால் **ஜெபத்தினால்** இடிந்து விழுந்து தரைமட்டமாக்கும்படி இயேசுவை நோக்கி அனுதினமும் முறையிடுங்கள். இன்று **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் பிதாவே! நான் உங்களுக்கு அன்பு செய்து எல்லா வேளையிலும் தேவ பயத்தோடு உங்களுக்குக் கீழ்படிந்து ஜீவிய நாட்களெல்லாம் நீங்கள் என் பட்சத்திலிருங்கள். தேவனே! இன்றும் என்னை உபத்திரவப்படுத்தும் சாத்தானை கடிந்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.” (ரோமர் 10:11)

ஜீவ மன்னா

பெப்ரவரி 03 திங்கள்

## தேவனின் வழிகளைக் காத்து நடப்பவர்கள் பாக்கியவான்கள் !

இன்றைய வேதவாசிப்பு

சங்கீதம் அதி: 37 – 38

**“ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்.”** (நீதிமொழிகள் 8:32)

அருமையான தேவ ஜனங்களே! இன்னுமொரு ***இனிய நாளைத் தந்த ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி உங்களுக்காக பிரார்த்திக்கின்றேன்.*** படிப்படியாக உலகின் முடிவை நோக்கி பயணிக்கும் இந்த ***யுகத்தில் சிருஷ்டிப்பின்*** தேவ பிதாவைக் குறித்து அறிந்துக் கொண்டு ஜீவிக்கின்ற தேவனின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் ***பாக்கியவான்களாவோம்.*** ஏனென்றால் ***சர்வ உலகத்தையும்,*** அதில் வாழ்கின்ற மனிதர்களையும் ***படைத்த சர்வ வல்லவராகிய*** பிதாவானவர் எங்களோடு இருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! உலகம் ***இறுதிக் காலத்தை*** நெருங்கிக் கொண்டிருக்கிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் இயற்கை ***அனர்த்தங்கள் ஆபத்துக்களில்*** உலக மனிதனானவனுக்கு ***மீட்பு*** இல்லாவிடினும், ஜீவிக்கின்ற அவரது பிள்ளைகளை இயற்கை ***ஆபத்துக்கள்,*** நெருங்காத வண்ணமாக பாதுகாக்கின்றார். ஏனென்றால் ***உண்மையாகவே*** தேவனை ***உறுதியாய்*** விசுவாசத்துடன் பற்றிக் கொள்பவர்களை தேவன் ***கைவிட மாட்டார்.*** அத்தோடு அவர்களுக்கு ஒரு சேதமும் ஏற்படாது. ***சங்கீதம் 9:10***இல் ***சிறுமைப்பட்டவனுக்குக்*** கர்த்தர் ***அடைக்கலமானவர்*** என்தாக கூறப்பட்டுள்ளது. நெருக்கப்படுகிற காலங்களில் அவரே ***தஞ்சமானவர்*** என்றாகும். ஆகையால் நீங்கள் தைரியமாயிருங்கள். மேற் கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் கூறியுள்ளபடி தேவனாகிய கர்த்தரின் ***வழிகளைக்*** காத்துக் கொண்டீர்களாயின் நீங்கள் ***பாக்கியவான்கள்.*** தேவனின் வழிகள் ***நீதியின்*** மார்க்கத்தில் உங்களைக் கொண்டு செல்லவும் ***பரிசுத்தமாக*** வாழவும் கற்றுத் தரும். ஆகையால் எல்லா வேளையிலும் தேவனின் குரலுக்கு செவிமடுத்து, தேவன் கூறுகிற வண்ணமாக உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

தேவ பிள்ளைகளே! தினந்தோறும் தேவ வசனத்தை வாசித்து அறிந்து உங்கள் வாழ்க்கையில் அவைகளைக் கடைப்பிடித்து தேவனுக்கு ***பிரியமான ஜீவியம்*** ஜீவிக்க முயற்சி செய்யுங்கள். அதற்கு விரோதமாக உங்களுக்கு எவ்வளவு தடைகள் ஏற்பட்டதா? ***உபத்திரவங்கள், பிரச்சினைகள்*** வந்ததா? ***அதைரியப்படாமல் விசுவாசத்தோடு*** தேவ வசனங்களைக் காத்து அவைகளுக்கு முகங்கொடுங்கள். பரலோகத்தில் ***வாசம் பண்ணும்*** உங்கள் தேவன் உங்கள் ***முயற்சியை*** காண்கின்ற வேளை உங்களைக் குறித்து ***சந்தோஷமடைந்து,*** உங்களை நோக்கி தேவ தூதர்களை அனுப்பி ***ஒத்தாசை*** புரிவார். தேவனின் வழிகளைக் காத்துச் செல்லும் வாழ்க்கைப் பயணத்திலும் தேவன் உங்களோடு சதாகாலமும் வாசம் பண்ணுவார். ***இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நீதியின் தேவனாகையால் உங்கள் வழிகள் அனைத்தும் நீதியானவை. பிதாவே உங்கள் வழிகளைக் காத்துக் கொள்ள உபகாரம் செய்யுமாறு

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.” (சங்கீதம் 128:1)

ஜீவ மன்னா

பெப்ரவரி 04
செவ்வாய்

**உங்கள் உள்ளம் சஞ்சலப்படாமலிருப்பதாக !**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 39 – 40

**"அவனை மேற்கொண்டேன் என்று என் பகைஞன் சொல்லாதபடிக்கும், நான் தள்ளாடுகிறதினால் என் சத்துருக்கள் களிகூராதபடிக்கும் இப்படிச் செய்தருளும்."** (சங்கீதம் 13:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற நம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாள் மன ஆறுதலுடன் கூடிய நந்நாளாக இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.*** உலகில் வாழ்கின்ற மானிடர்களில் சகல ஜாதிகளுக்கும் மத்தியில் ***சிருஷ்டித்த*** தேவ பிதாவானவரின் தோந்தெடுத்தலும் அழைப்பும் பெற்ற ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் ஆசீர்வாதம் பெற்றவர்களாவோம். ஏனென்றால் மனிதர்களால் அல்ல பரலோகத்தில் ***வாசம் பண்ணும்*** எம்மைப் ***படைத்த*** தேவனின் ***சொந்த அபிப்பிராயத்தின்படி*** தேவன் எங்களைத் தமது பிள்ளைகளாக்கிக் கொண்டார். அது ***விஷேச வரப்பிரசாதமல்லவா?***

தேவ பிள்ளைகளே! ஆவிக்குரிய பிள்ளைகளாகிய உங்களுக்கு ***விரோதமாக உலகில் கண்களுக்கு புலப்படாத*** துஷ்ட ஆவிகளின் சேனை செயல்படுகின்றதென்பதை நீங்கள் அறிவீர்கள். ஏனென்றால் நீங்கள் தேவனின் பிள்ளை என்பதாலும் நீங்கள் பரலோக இராஜ்யத்திற்கு உரிமை பெற்றவர்கள் என்பதாலும் ***சாத்தான் மிக தீவிரமாக செயல்படுகிறான்,*** என்பதாக தேவ வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் சாத்தான் ***அரூபியாக*** இருந்து, மனிதரை ***உபயோகப்படுத்தி*** உங்களுக்கு விரோதமாக பலவிதமான ***எதிர்மாறான, தீய செயல்களைச்*** செய்கின்றான் என்றாகும். ஆகையால் உங்கள் குடும்ப அங்கத்தவர்கள், நீங்கள் ***நட்பு*** கொண்டிருக்கும் அருமை நண்பர்கள் உங்கள் உறவினர்கள், நீங்கள் ***கடமை புரியும் காரியாலயம்,*** மற்றும் ***வேலைத்தளத்தில்*** உங்கள் உடன் உத்தியோகத்தர்கள், மற்றும் எந்தவொரு நபருக்கூடாகவாவது உங்களை வேதனைப்படுத்த, உங்கள் ஆத்துமாவை பின்மாற்றமடையச் செய்ய, உங்களை ***அழிப்பதற்கு சத்துருவானவன்*** செயல்பட முடியும் இப்பொழுதும் நீங்கள் இவ்வண்ணமாக ***உபத்திரவத்திற்குட்பட்டு*** இருந்தீர்களாயினும் நீங்கள் ***பயப்படாதீர்கள்.*** நீங்கள் ***சஞ்சலப்படாதீர்கள்.*** மேற் கூறப்பட்ட ***சங்கீதம் 13:4*** இல் தாவீது ராஜா சொல்கிறதாவது ***நான் தள்ளாடுகிறதினால் என் சத்துருக்கள் களிகூராதபடிக்கும்*** என்றாகும். ஆகையால் மனிதன் உங்களுக்கு ***விரோதமாக கிரியை*** செய்தாலும் நீங்கள் மனதை ***அதைரியப்படுத்திக்*** கொள்ளாதீர்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் ***மனம் சஞ்சலப்படுகின்றதென்பது*** உங்கள் ***சோர்வு, பலவீனம்*** என்பவற்றைக் குறிக்கும். உங்கள் உள்ளத்தை ***சஞ்சலப்பட*** விடாதீர்கள். தேவனைக் குறித்து முழு உள்ளத்தில் ***விசுவாசத்தோடு, நம்பிக்கையோடு ஜீவியுங்கள். உங்களுக்கு ஏதாவது துக்ககரமான*** சம்பவங்கள் நிகழும் போது தேவனின் ***சமூகத்தைத் தேடுங்கள்.*** தேவன் உங்களுக்கு ***பதில்*** கொடுக்கும் தேவன் என்பதை ***விசுவாசித்து ஜெபம் பண்ணுங்கள்.*** தேவன் ***பதில்*** கொடுக்கும் போது சாத்தான் தோல்வியடைவான். ***உங்களுக்கு வெற்றிகரமான நாள்!***


ஜெபம்

என் தேவனே! நீங்கள் நீதியின் தேவன் நான் உங்கள் பிள்ளையாதலால்
என்னை எதிரிகளின் முன்னே வெட்கமடையச் செய்ய மாட்டீர்
என்பதனை நான் நன்றாக அறிவேன். நீங்கள் என்னை
பெலப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்." (யோசுவா 1:9)

ஜீவ மன்னா
பெப்ரவரி 05
புதன்

## உங்கள் உள்ளம் திகையாதிருக்கட்டும் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 41 – 42

**“இயேசு கண்ணீர் விட்டார். அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்!”** (பரி.யோவான் 11:35,36)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! நாம் **வேதனையுற்று** கண்ணீர் விடும் தருணங்களில் எம்மோடிருக்கும் **இயேசுகிறிஸ்துவின் அன்பான நாமத்தினால் இன்றைய நாள் இன்பமயமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** பரலோக **இரகசியங்களைக்** குறித்தும் அத்தோடு தேவ பிதாவின் **அளவு** கடந்த **அன்பைக்** குறித்தும் அவரின் **கிருபையைக்** குறித்தும் இரக்கத்தைக் குறித்தும் எங்களுக்கு அறிந்துக் கொள்ள எமது **மொழியிலேயே** எழுதிய தேவனுடைய **வசனங்கள்** அடங்கிய பரிசுத்த வேதாகமத்தை எங்கள் கரங்களுக்குக் கிடைக்கக் கிரியை செய்த தேவனுக்கு என் **முழு உள்ளத்தோடு** ஸ்தோத்தரிக்கின்றேன்.

தேவ பிள்ளைகளே! ஒரு மனிதனுக்கு ஏதாவதொரு **ஆபத்து, பிரச்சினை, நோய்** ஏற்படும் வேளையில் அதற்கு இன்னுமொரு மனிதனின் துணை, அறிவுரை பெற்றுக் கொள்ள தேவைப்படும் போது அவற்றிற்கு **பணம் செலவு** செய்ய வேண்டியதாகின்றது. உங்கள் **துக்கத்தில்,** உங்கள் ஆதரவற்ற நிலையில் மனிதர்கள் **மனம் இரங்காது பணம்** பெற்றுக் கொள்ளும் நோக்கமாகவே **கிரியை** செய்வார்கள். ஆனால் நம் தேவனாகிய கர்த்தர் அப்படியாக செயல்படுபவரல்ல. **பரலோகப்** பிதாவின் ஒரே பேறான குமாரன் **மனு உருவெடுத்து** இவ்வுலகில் பிறந்து அனைத்து மனிதர்களுக்காக **சிலுவையில்** தம்மையே **பலியாக** ஒப்புக் கொடுத்தார். மனிதர்களுக்கு இன்னுமொரு மனிதனின் **உபதேசம், துணை, உதவிகள்,** பெற்றுக் கொள்ள **பணம் அவசியமானாலும்** எம்மைப் **படைத்த** தேவனோடு நாங்கள் பேசுவதற்கு **ஒத்தாசை, துணை** பெற்றுக் கொள்ள **ஆலோசனையைப்** பெற்றுக் கொள்ள எந்தவிதமான **கொடுப்பனவுகளும்** செலுத்த வேண்டிய **அவசியமில்லை.** மேற் கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது மரியாள் தனது சகோதரன் **லாசரு** மரித்த வேளையில் **கண்ணீர்** விட்டு அழுத போது இயேசுகிறிஸ்துவும் கண்ணீர் விட்டு **அழுதார்** எனவும் அப்பொழுது **யூதர்கள்** இதோ இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள். என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டதையே ஆகும்.

தேவ பிள்ளைகளே! **பெத்தானியா** என்னும் கிராமத்தில் **லாசரு** என்பவரையும் அவருடைய சகோதரிகள் இரண்டு பேரையும் வெகுவாய் நேசித்த **இயேசுகிறிஸ்து** இன்றும் ஜீவனுள்ளவராக, **மத்தியஸ்தராக** எங்கள் மத்தியில் **கிரியை** செய்கின்றார். தனது ஒரே சகோதரனை **இழந்தபடியால் அழுது கண்ணீர்** விட்ட சகோதரிகள் இருவரின் **வேதனையை** கேட்டு தேவன் இழந்த அவர்களது சகோதரனை **மீண்டுமாக** அவர்களுக்கு பெற்றுக் கொடுத்தைப்போல் இன்றும் உங்கள் **துக்கத்தைக்** கேட்டு உங்களுக்கு துணை புரிவாராக, **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் குமாரரானாகிய இயேசு கிறிஸ்து என் துக்கத்திற்கு உங்களிடம் சகாயம் பெற்றுத் தருவதால் ஸ்தோத்திரம் இன்றும் நான் எனது துக்கத்தை உங்களுக்கு கூறுகின்றேன். உங்கள் மகன் மூலமாக பதில் தாருங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?” (பரி:லூக்கா 18:7)

ஜீவ மன்னா
பெப்ரவரி **06**
வியாழன்

## உங்கள் துயரத்தை கேட்கும் மீட்பரான இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 43 – 44

**"அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான்."**
(பரி:யோவான் 9:11)

அருமையான தேவ ஜனங்களே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அவரது என்றுமே மாறாத அன்பைப் பெற்ற மகிழ்ச்சிகரமான நாளாக இன்றைய நாள் அமையும்படியாக வாழ்த்துகின்றேன்.*** தேவனது வசனத்தைக் குறித்து பிரியமுடன், ஆவலுடன், தாகத்துடன் ஜீவ மன்னாவை தின தியானங்களை வாசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் மிக அதிர்ஷடக்காரார்கள்.

தேவ பிள்ளைகளே! **ஆவிக்குரிய** பிள்ளைகளான நாங்கள் ஒவ்வொருவரும் காண்பதில் அல்ல, விசுவாசத்தோடு இவ் வாழ்க்கை பயணத்தில் முன் நோக்கி கால் வைக்கின்றோம். எங்கள் தேவனாகிய கர்த்தர் ***அரூபியாக*** எங்கள் மத்தியில் ஜீவிக்கின்றபடியால் நாங்கள் அவரது தேவ ***வசனத்தின்படி*** ஜீவிக்கின்றேமா? என்று அவதானித்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் தேவனின் ***சொந்தப் பிள்ளைகளாகிய*** நாங்கள் எங்கள் அன்பான ***சிருஷ்டிப்பின்*** தேவ பிதாவுக்கு கீழ்படியும் ***கீழ்ப்படிதலை*** மாத்திரம் தேவன் எங்களிடம் எதிர்பார்க்கின்றார். வேறு ஒன்றையும் அவர் எம்மிடம் எதிர்பார்ப்பதில்லை. பரி. வேதாகமத்தில் ***1 சாமுவேல் 15:22*** இல் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் ***சர்வாங்க தகனங்களும், பலிகளும்*** கர்த்தருக்குப் ***பிரியமாயிருக்குமோ? பலியைப்*** பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ***ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும்*** செவி கொடுத்தலும் ***உத்தமம்*** என்று எழுதப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள பிரதான தேவ வசனத்தில் குறிப்பிடப்படுகின்றதாவது பிறந்தது முதல் குருடனாகவிருந்த மனிதனைக் கண்ட இயேசுகிறிஸ்து அவனுக்கருகில் சென்று ***சேறுண்டாக்கி*** அவனின் கண்களின் மேல் பூசி நீ ***ஸிலோவாம்*** குளத்திலே கழுவு என்று கூறினார். அவன் குளத்திற்குச் சென்று கழுவிய போது பார்வைப் பெற்றான் என்பதையாகும்.

தேவ பிள்ளைகளே! அந்த ***குருடனான*** மனிதன் இயேசுகிறிஸ்து அவனை உடனே ***குணப்படுத்துவாரென நினைத்திருக்கக் கூடும்.*** ஆனாலும் தேவன் அவனது கண்களில் ***சேற்றைப் பூசி*** அவனுக்குக் கூறியதாவது ***ஸிலோவோம்*** குளத்திற்குச் சென்று கண்களைக் கழுவும்படியாகவே. அவ்வேளையிலேயே தேவன் ***குருடனின்*** கண்கள் மேல் தம் ***கரங்களை*** வைத்து அவனைக் குணமாக்கவில்லை யெனினும் தேவன் கூறிய தேவ வசனத்திற்கு கீழ்ப்படிந்து செயல்பட்டபடியால் அவன் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டான். நீங்கள் ***தைரியமாயிருங்கள்.*** நீங்கள் தேவ வசனத்திற்குக் ***கீழ்ப்படிந்து*** ஜீவிக்கின்ற போது உங்கள் வாழ்க்கையில் பெரிய ***அற்புதங்கள்,*** மாறுதல்கள் நடக்கும். ***இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள்!***



ஜெபம்

என் தேவனே! ஆச்சரியமானவைகளைச் செய்கின்ற தேவன் நான் உங்கள் வசனத்திற்கு கீழ்ப்படிந்து அதன்படி கிரியை செய்கின்றேன். இயேசுகிறிஸ்துவுக்கூடாக நீங்கள் என் வாழ்வில் அற்புதங்களைச் செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்."
(நீதிமொழிகள் 16:20)

ஜீவ மன்னா
பெப்ரவரி 07
வெள்ளி

## இமைப் பொழுது உங்களைக் கைவிட்டாலும் உருக்கமான இரக்கத்தினால் சேர்த்துக் கொள்ளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 45 – 46

**“இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன்.”** (ஏசாயா 54:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் தேவனின் மாறாத கிருபை உங்களை காத்து வழி நடத்தும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஜீவிக்கின்ற தேவனைக் குறித்து அறிந்துக் கொண்டு அவரது **சொந்த பிள்ளைகளாக** இருக்கும் நீங்கள் அனைவரும் **பாக்கியவான்கள்.** ஏனென்றால் தேவனாகிய கர்த்தர் **சதாகாலமும்** உங்களோடு இருப்பாராக!

தேவ பிள்ளைகளே! **ஏசாயா 54:7** பிரதான தேவ வசனத்தில் நீங்கள் கூறுவதாவது உங்கள் தேவனாகிய கர்த்தர் **இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன் ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன்** என்றாகும். தேவன் ஒரு **இமைப்பொழுது** ஆயினும் எங்களைத் கைவிடுகிறார் அல்லவா? என்று நீங்கள் நினைக்கக் கூடும் உங்கள் உள்ளம் **கலங்காதிருப்பதாக,** உங்கள் தேவன் உங்களை மிகவும் நேசிக்கின்றார். அத்தோடு எங்கள் வாழ்க்கையைக் குறித்து முழு பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளார். எங்கள் **பிராணனைக்** குறித்து மாத்திரமல்ல எங்கள் ஆத்துமாவைக் குறித்தும் பூரண பொறுப்பு தேவனின் கரங்களில் உள்ளது. ஆகையால் எங்கள் **ஜீவனைப்** போன்று எங்கள் ஆத்துமாவையும் பாதுகாத்து எங்கள் எல்லா **ஆசீர்வாதங்களையும்** கொடுக்க தேவன் கிரியை செய்வாராக! சில வேளைகளில் எங்கள் **ஜீவனுக்கும்** ஆத்துமாவிற்கும் ஏதாவதொரு **தீமையும்,** அழிவும் ஏற்படும் வண்ணமாக எந்தவிதத்திலாவது ஒரு **சோதனையை** ஏற்படுத்தக் கூடும். அப்படியான சந்தர்ப்பங்களில் தேவனின் குரலை கவனத்திற் கொள்ளாது, **அசட்டை** பண்ணும் போது **சோதனைக்குட்பட** நேரிடலாம். அப்படியான வேளைகளில் தேவன் **கோபப்பட்டு** எங்கள் **கீழ்ப்படியாமை** காரணமாக எமக்கு சிறிய **தண்டனையொன்றைக்** கொடுத்து மீண்டுமாக எம்மை தேவனிடம் கிட்டிச் சேர்த்துக் கொள்ளும்படியாக ஒரு **இமைப்பொழுது** எங்களைக் கைவிடுவார்.

தேவ பிள்ளைகளே! அப்படியான **இமைப்பொழுது** எங்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய **வேதனையைக்** கொடுக்கும். ஏனெனில் அவ்வேளையில் சாத்தான் அவனுடைய வல்லமையை **உபயோகப்படுத்தி** எங்களுக்கு அதிகமான **வேதனையைக்** கொடுப்பான். ஆனாலும் நீங்கள் தேவனிடம் **மன்னிப்புக்** கேட்கும் போது தேவன் மகா இரக்கத்தோடு மீண்டுமாக **தன்னண்டையில்** அழைத்து அரவணைத்துக் கொள்வார். அப்பொழுது உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் நிர்மூலப்படுத்தப்படும். இன்று உங்களுக்கு **வெற்றிகரமான நாள்!**



ஜெபம்

என் தேவனே! எனது கீழ்ப்படியாமை காரணமாக சாத்தானிடம் அகப்படும் வேளை என்னை மீண்டுமாக தன்னண்டை சேர்த்துக் கொள்ளும்படியாக ஒரு இமைப்பொழுது என்னைக் கைவிடுவார். ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் என்னைச் சேர்த்துக் கொள்வார். இன்று முதல் உங்களுக்கு கீழ்ப்படிந்து வாழ்வதற்கு கிருபை தாரும். இயேசுவின் நாமத்தினால். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.” (ஏசாயா 54:8)

ஜீவ மன்னா

பெப்ரவரி **08**
சனி

## நீங்கள் உங்கள் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டீர்களா !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 47 – 48

**"உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்."** (பரி:மத்தேயு 18:15)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் அருமையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.*** ஆத்மீக பிள்ளைகளான எமக்கு தேவ வசனமானது ***ஆவிக்குரிய*** போசனையாகும். ஏனென்றால் மனிதன் உண்ணுகின்ற உணவுகளில் அவனுடைய ***சரீரமும்,*** மூளையும் வளர்ச்சியடைகின்றது. ***ஆத்மீக*** பிள்ளைகள் தேவ வசனத்தில் அவர்களுடைய ***ஆத்துமாவை*** பெலப்படுத்திக் கொண்டு இவ்வுலகில் அவர்கள் மேலானவைகளைத் தேடுவதால் அவர்களின் ஆத்துமா ***சுத்திகரிக்கப்படுகின்றது.***

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட பரிசுத்த வேதாகம வசனத்தை நீங்கள் மிகவும் கருத்தோடு வாசித்து உங்கள் முழு அவதானத்தையும் செலுத்துங்கள். நீங்கள் ஆத்மீக பிள்ளையாயினும், ***ஆத்மீகமற்ற*** ஒருவராயிருப்பினும் மேற் கூறப்பட்ட வசனம் எமது வாழ்விற்கு மிகவும் ***அவசியமானதென்பதை*** அறியத்தருகின்றேன். ஏனென்றால் அங்கு கூறப்படுகின்றது உங்கள் சகோதரன் அல்லது சகோதரியை ***ஆதாயப்படுத்திக்*** கொள்ளும் வழிமுறையாகும். தேவ பிள்ளைகளே! உங்களுடைய ***சொந்த*** குடும்பத்திலோ அல்லது உறவினர்கள் குடும்பத்திலோ அல்லது அயல் வாசிகளின் குடும்பங்களில், நீங்கள் கொண்டுள்ள நண்பர்கள், யாராயினும் உங்களுக்கு ***விரோதமாக*** ஏதாவதொரு ***பிழை செய்தால்*** அவர்களோடு ***பகை*** கொண்டு அவர்களினின்று பிரிந்து போய் தனிமையாக ***வாழ*** முயற்சி செய்யாதீர்கள். அவர்கள் உங்களுக்கு ***பிழை செய்திருப்பின்*** அவர்களைத் ***தள்ளி விடாதீர்கள்.*** தேவ வசனத்திலே கூறுவது போல அவர்களது, பிழை, குறைபாடுகள் குறித்து மற்றவர்களிடம் கூற ***முயற்சிக்காதீர்கள்.*** அவர்களைக் குற்றப்படுத்தாதீர்கள்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் அவர்களைச் சந்தித்து அவர்களது ***பிழையை*** அவர்களுக்கு ***உணர்த்தி*** காட்டுங்கள். ஆனாலும் நீங்கள் ***சாந்தமாகவும், அன்பாகவும் செயலாற்றுங்கள்.*** நீங்கள் அன்போடு அவர்களுடன் பேசுகின்ற போது உங்கள் வசனத்திற்கூடாக அவர்களது உள்ளத்தை தேவன் மாற்றுவார். அவர்கள் உங்கள் வசனத்தைக் கேட்காவிட்டாலும் அவர்கள் மேல் ***கோபங் கொள்ளாதீர்கள்.*** அவர்களுக்காக ***இடைவிடாமல்*** ஜெபித்து அவர்களின் உள்ளத்தை மாற்றுமாறு தேவனிடம் கேட்கும் போது தேவன் பதில் தருவார். ஏனெனின் எங்கள் தேவன் ***பலவானையும் பலவீனனையும்*** நிறுத்துப் பார்த்து தள்ளி விடுபவரல்ல அனைவரையும் அன்பான ***கண்களோடு*** நோக்கி ஒரே மாதிரியாக ***நேசிக்கும்*** தேவனானவர். இன்று ***வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் அன்பின் தேவன் நீங்கள் உங்கள் அன்பினால் என்னை உத்தமனாக்கினீர்கள். எனக்கு விரோதமாக செயல்படுபவர்களை அன்பினால் வெற்றிக் கொள்ள உதவி செய்யுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்."
(பரி.மத்தேயு 18:35 )

ஜீவ மன்னா
பெப்ரவரி 09
ஞாயிறு

## மீண்டுமாக உங்களுக்கு நன்மை செய்ய நினைக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 49 – 50

**"இந்நாட்களில் எருசலேமுக்கும் யூதாவுக்கும் நன்மைசெய்யும்படித் திரும்ப நினைத்தேன்; பயப்படாதேயுங்கள்."** (சகரியா 8:15)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளில் உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்கு மேலாக காரியங்களை வாய்க்கப் பண்ணுமாறு வாழ்த்துகின்றேன்.*** உலகில் வாழ்கின்ற மனிதர்களின் மத்தியில் ***பெலனும், நிறைவும்*** பெற்ற மனிதர்களைப் போல ***பலவீனரான, குறைகள்*** நிறைந்த மனிதர்களும் காணப்படுகிறார்கள். ***பலவீனரான, குறைகள்*** நிறைந்த மனிதரைப் பார்க்கிலும், ***பெலனும்*** பூரணமான மனிதன் பலவிதமான ***பெருந் துன்ப, உபத்திரவங்களில்*** மூழ்கியிருக்கின்ற சந்தர்ப்பங்கள் அநேகமாயிருக்கின்றன. ஆனாலும் நீங்கள் ***கலங்காதிருங்கள்.***

தேவ பிள்ளகளே! அவ்வகையான நிகழ்வுகளில் ஒரு கூட்டத்தினர் துன்ப, துயர, வேதனைகளில் மூழ்கியிருக்கும் போது மற்றுமொரு கூட்டத்தினர் அவர்களின் வேதனையில் மகிழ்ச்சியடைவர். ஆனால் எம்மை ***சிருஷ்டித்த*** தேவனானவருக்கூடாக ***சொந்த ஜனங்களாக வேறுபிரிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு*** மனிதர்களின் மூலம் அப்படியான ***உபத்திரவங்கள்*** ஏற்பட்ட அல்லது அநீதிகள் இடம்பெற தேவன் ஒருபோதும் இடமளிக்கமாட்டார். அதுமாத்திரமல்ல கண்களுக்கு புலப்படாமல் செயல்படுகின்ற சாத்தானையும் தன் ***சொந்த பிள்ளைகளுக்கு உபத்திரவம்*** கொடுக்க இடமளிக்க மாட்டார். ஏனென்றால் தேவனுடைய வல்லமைக்கு மேலாகக் கிரியை செய்ய ***பிறிதொரு வல்லமையால்*** அதாவது ***மனிதனாலேயோ, சாத்தானாலேயோ, கிரிகை*** செய்ய முடியாது. ஆனாலும் நீங்கள் தேவனின் அன்பினின்று தூரப் போகும் போது, வாழ்க்கையில் ***ஜெபக்*** குறைவு ஏற்படுகின்ற வேளை தேவனின் கிருபை உங்களுக்கு தூரமாகின்றபடியால் சாத்தானுக்கு மாத்திரமல்ல மனிதர்களும் கூட உங்களுக்கு துன்பங்கள் விளைவிக்கலாம்.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் ***கலங்காதிருங்கள்!*** உங்களுக்கு நன்மைகளைச் செய்ய தேவன் வல்லவராய் இருக்கின்றார். ஆகையால் ***பயப்படாதீர்கள்*** என்று உரைக்கின்றார். ***அவ்வண்ணமே*** நீங்கள் தேவனிடமிருந்து ***பிரிந்து*** தூரப் போகையில் நீங்கள் எனக்கு ***கோப*** மூட்டின போது நான் உங்களைத் தண்டிக்க நினைத்து, ***மனம்மாறாமல்*** இருந்தது போல என ***சகரியா 8:14***இல் எழுதப்பட்டுள்ளது. அப்படி தேவன் செய்வது தன்னண்டையில் ***சேர்த்துக்*** கொள்ளுமுகமாகவேயாகும். நீங்கள் உங்களையே ***ஆராய்ந்து*** மீண்டுமாக தேவனுக்குள் ***கிட்டிச் சேருங்கள். இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நான் உங்களிடமிருந்து தூரப் போகையில் எனக்கு ஆபத்து நேரிட அனுமதி அளித்து ஆபத்தில் மீண்டுமாக என்னை கிட்டிச் சேர்த்துக் கொள்வதால் ஸ்தோத்திரம் உங்கள் வசனத்தின்படி மீண்டுமாக எனக்கு நன்மை செய்யுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்."
(எரேமியா 33:8)

ஜீவ மன்னா
பெப்ரவரி 10
திங்கள்

## சாத்தானின் பரீட்சையில் எமக்கு ஜெயங் கொடுக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 51 – 52

**"அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."** (பரி.லூக்கா 4:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **இனிதான இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்று உங்களை எதிர் கொள்ளும் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறும்படியாக வாழ்த்துகின்றேன்.** சர்வ வல்லமையுடைய தேவ பிதாவானவரது பிள்ளைகளாக உலகில் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள் அனைவரும் இப் பூவுலகில் வாழ்கின்ற அனைத்து மாந்தர்க்கிடையில் ***அதிவிஷேசித்தவர்கள்*** ஆவீர்கள்.

தேவ பிள்ளைகளே! ***கண்களுக்கு புலப்படாத*** வல்லமைகள் செயல்படுகின்ற போதும் அவைகளைக் குறித்து எந்த விதமான போதனைகளையும் பெற்றுக் கொள்ள முடியாமல் உலக மனிதர்கள் ***திக்கற்றவர்களாய்*** சோர்ந்து வீழ்ந்து போய் இருக்கின்றார்கள். ஆனாலும் எங்கள் ஜீவிக்கின்ற தேவ பிதாவானவர் இவ்வுலகில் செயல்படுகின்ற ***சாத்தானின்*** அந்தகாரத்தின் ***இராஜ்யம்*** பற்றி அவனது செயல்களைக் குறித்து எங்களுக்கு ***தெளிவான*** விளக்கங்களைத் தந்துள்ளார். அது மாத்திரமல்லாது ***சாத்தானின்*** முழு வல்லமையையும் மேற் கொள்ளும்படியாக தேவனின் பிள்ளைகளாகிய எமக்கு தேவனின் ***பரிசுத்த*** தேவ ஆவியானவருக்கூடாக அவரின் ***அதிவிஷேட*** வல்லமையை எங்களுக்குப் பெற்றுத் தந்துள்ளார். உங்கள் உள்ளம் ***கலங்காதிருப்பதாக!*** உங்கள் வாழ்க்கையில் நீங்கள் முகங் கொடுக்கும் அனைத்து ***பிரச்சினைகள், உபத்திரவங்கள், துன்பங்கள்*** ஆகியவற்றின் போது இவை அனைத்தும் ***சாத்தான்*** எனக்கு உண்டாக்கினான் என்று கூறாதீர்கள். அல்லது சாத்தான் ***பரீட்சிக்கிறான்*** என்று காலத்தைை ***வீண்*** விரயமாக்காதீர்கள்.

தேவ பிள்ளைகளே! மேற் சொல்லப்பட்ட பிரதான தேவ வசனத்தில் எழுதியுள்ளது இயேசுகிறிஸ்து ***சாத்தானுக்கு*** பதில் கொடுத்த முறையாகும். ***40 நாள் உபவாசித்த*** வேளை அந்த நாட்கள் முடிந்த பின்பு அவருக்கு ***பசியுண்டாயிற்று.*** அப்பொழுது பிசாசு அவரை நோக்கி நீர் தேவனுடைய குமாரனேயானால் ***இந்தக்கல் அப்பமாகும்படி*** சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய ஒவ்வொரு ***வார்த்தையினாலும்*** பிழைப்பான் என்று எதியிருக்கிறதே என்றார். இந்த வசனம் மேலே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். அவர் சாத்தானுக்கு ஏற்ற ***பதிலைக்*** கொடுத்து வெற்றி பெற்றார். நீங்கள் ***தைரியமாயிருங்கள்.*** தேவனின் தேவ ஆவியானவர் உங்களுக்குள் ***வாசம்பண்ணுவதால்*** சாத்தானின் பரீட்சையில் நீங்களும் ***ஜெயங்*** கொள்ளலாம். ***பரி.லூக்கா 10:19, பரி.மாற்கு 16:17 யாக்கோபு 4:7*** போன்ற தேவ வசனங்களை நன்றாக வாசித்து நீங்கள் சாத்தானை தோற்கடித்து ***ஜெயங்*** கொள்ளுங்கள். எல்லா வேளையிலும் ***இயேசுகிறிஸ்துவின்*** நாமத்தை உங்கள் ***வாயில் அறிக்கையிடுங்கள். பரலோகத்திலும்*** பூலோகத்திலும் வல்லமையான ஒரே நாமம் இயேசுகிறிஸ்து என்ற நாமம் மாத்திரமே. அந்த நாமத்தை அறிந்துக் கொண்ட நீங்கள் ***பாக்கியவான்கள். இயேசுவின் நாமத்தில் ஆமென்!***

ஜெபம்

என் தேவனே! உங்கள் திருக்குமாரன் இயேசுகிறிஸ்துவுக்காக ஸ்தோத்திரம். தேவன் சாத்தானின் சோதனைகளில் ஜெயங் கொண்டார்.எனக்கும் பயமில்லாமல் சாத்தானை தோற்கடிக்க வல்லமையைத் தாருங்கள்.இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்." (யோவான் 16:33)

ஜீவ மன்னா
பெப்ரவரி 11
செவ்வாய்

**யூதா வம்சத்திற்கு இரங்கிய தேவன் இன்று உங்களையும் நிலைக்கப் பண்ணுவார்!**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 53 – 54

**"நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தாரை இரட்சித்து, அவர்களைத் திரும்ப நிலைக்கப்பண்ணுவேன்; நான் அவர்களுக்கு இரங்கினேன்; அவர்கள் என்னால் ஒருக்காலும் தள்ளிவிடப்படாதவர்களைப்போல் இருப்பார்கள்; நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர், நான் அவர்களுக்குச் செவிகொடுப்பேன்."** (சகரியா 10:6)

அருமையான தேவ ஜனங்களே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வளம் மிகுந்த நாளாக அமையும்படியாக வாழ்த்துகின்றேன்.*** என்றுமே ***கைவிடாத*** எங்கள் ***வேதனையில், துக்கத்தில்*** ஒரு போதும் எம்மை விட்டு ***விலகிப்*** போகாத, அநாதி சிநேகத்தால் எம்மை சிநேகிக்கின்ற, இயற்கைக்கு மேலாக இவ்வுலகில் உதவி செய்கின்ற, எங்களுக்கு ***துணை*** புரிகின்ற, எம்மைப் ***படைத்த சர்வ வல்லமையான*** ஜீவிக்கின்ற தேவ பிதாவைக் குறித்து அறிந்துக்கொண்டு தேவனை முழு உள்ளத்தோடு ***விசுவாசத்துடன்*** முன்னோக்கிச் செல்கின்ற நீங்கள் ***பாக்கியவான்கள்.***

தேவ பிள்ளைகளே! மேற் குறிப்பிட்ட பிரதான வேதாகம வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது, ***யூதா வம்சத்தைப்*** பலப்படுத்தி, ***யோசேப்பு வம்சத்தாரை*** இரட்சித்து, அவர்களைத் திரும்ப நிலைக்கப் ***பண்ணுவேன்.*** நான் அவர்களுக்கு இரங்கினேன் என்றாகும். உலக மனிதனைப் போன்று ***ஆத்மீக*** பிள்ளைகளான நாமும் தினந்தோறும் பல விதமான ***நிகழ்வுகளுக்கு முகங்*** கொடுக்கிறோம். நாங்கள் இன்று மிகவும் ***சந்தோஷமாக*** இருக்கின்றோம். ஆனாலும் அடுத்த ***தருணமே*** எங்கள் மனதிற்கு தாங்க முடியாத ***வேதனை துக்கம்*** ஏற்படலாம். வாழ்க்கையில் எல்லாம் ***பூரணமாக*** இருப்பின் நாங்கள் எல்லா வேளையிலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் ***பண்ணி*** மகிழ்ச்சியாக இருப்போம். ஆனாலும் எங்களுக்கு ***பிரச்சினைகளுக்கு*** முகங்கொடுக்க நேரிடும் போது ***மனங் கலங்கி, சோர்ந்து*** இப்பொழுதென்றால் இவ்வாழ்க்கையே போதுமென்றாகி விட்டது. ***இயேசுவின்*** அருகிலேயே வந்தும் எனக்கு ***பிரச்சினைகளுக்குத் தீர்வு*** இல்லையே என்று வாழ்க்கையில் பின்மாற்றமாகி செல்லும் அநேக ***சந்தர்ப்பங்களுண்டு.*** சில வேளைகளில் இயேசுகிறிஸ்துவை விட்டு ***விலகி தூரமாகிப்*** போய் ***விடவுங்*** கூடும்.

தேவ பிள்ளைகளே! இப்படியாக உங்கள் வாழ்க்கையில் நீங்கள் விரக்தியோடு இருக்கின்றீர்களா? ஆனாலும் ***கவலைப்படாதிருங்கள்!*** தேவனின் மகனான, உங்கள் இரட்சகர் ***இயேசுகிறிஸ்துவைக்*** குறித்து நீங்கள் கொண்டுள்ள ***விசுவாசத்தை அதிகரித்துக்*** கொள்ளுங்கள். உங்களை ***ஆறுதல்படுத்துகின்ற*** உங்களுக்குத் ***துணை*** செய்கின்ற உங்கள் ***இயேசுகிறிஸ்து*** இன்றும் உங்களோடு கூட இருக்கின்றார். ***தேவன்*** உங்களுக்கு அதிகமதிகமாக இரக்கங் கொண்டு உங்களை ***பெலப்படுத்தி மீண்டுமாக*** உங்களை ***எழும்பச்*** செய்வார். உங்களையும் உங்கள் வம்சத்தையும் தேவன் ***பெலனோடு*** முன் கொண்டு செல்வாராக! ***இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! உங்கள் மகனான இயேசுகிறிஸ்து இன்றும் என்னோடிருப்பதால் ஸ்தோத்திரம். நொறுக்கப்பட்டு வீழ்ந்த என்னுடைய வாழ்க்கை உங்களின் திருக்குமாரனால் மீட்டு பெலப்படுத்தி முன்னோக்கி கொண்டுச் செல்லுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இஸ்ரவேல் வம்சத்தார் இனி என்னைவிட்டு வழிதப்பிப்போகாமலும், தங்கள் எல்லா மீறுதல்களாலும் இனி அசுசிப்படாமலும் இருக்கும்பொருட்டாக இப்படிச் சம்பவிக்கும்; அப்பொழுது அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்."
(எசேக்கியேல் 14:11)

ஜீவ மன்னா
பெப்ரவரி 12
புதன்

# எங்களுக்குள் வாசம் பண்ணும் தேவனாகிய கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 55 – 56

**"சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."**
(சகரியா 2:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில்** உங்களுக்கு மலையைப் போன்று பெரிதான பிரச்சினை நெருங்கினாலும் அது சமதரையாக மாறி **வெற்றிகரமான நாளாகும்படி வாழ்த்துகின்றேன்.** சதாகால தேவ பிதாவானவரின் **உரிமையின்** பிள்ளையாக உங்களை இவ்வுலகில் வேறுபடுத்திக் கொண்டுள்ளமையால் நீங்கள் **பாக்கியவான்.** ஏனென்றால் இன்றும் தேவன் எம்மோடிருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! **கலங்காதிருங்கள்!** எந்த நாட்டிலும் ஜனாதிபதி பதவியை வகிப்பவர்களுக்கு வசிக்கும்படியாக விஷேசித்த ஒரு மாளிகையிருக்கும். எங்கள் நாட்டிலும் காணப்படுகின்றது. எங்கள் நாட்டிலும் அப்படியாகவே காணப்படுகின்றது. எங்கள் **மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள்** கொழும்பு நகரிலிருந்து வெறொரு பிரதேசத்திற்கு செல்லுகின்ற போதும், **வெளிநாடுகளுக்கு** சென்றடைந்த பின்னரும் அவருக்கு ஒரு **விசேஷித்த** இடத்தை தங்குவதற்காக **ஆயத்தப்படுத்தியிருப்பார்கள்.** அது மிக **உயர்ந்த** விஷேசித்த இடமாகும். தேவ பிள்ளைகளே! என்னிடமும், உங்களுக்குள்ளும் **வாசம் பண்ணும்** தேவன் எவ்வளவு **உயர்ந்தவர், மகத்துவமானவர்?** அவர் வாயினின்று புறப்படும் வார்த்தை காரியங்களை **வாய்க்கப்பண்ணும்** தேவன் **தாயின் வயிற்றில்** எம்மை உருவாக்கினார். படைப்பின் தேவன் ஆனாலும் அவர் எங்களுக்குள் **வாசம் பண்ணுவதை** நீங்கள் அறியீர்களா? இன்றைய நாளில் **சகரியா 2:10** இல் தேவன் எமக்கு கூறகின்றதாவது தேவன் உங்களுக்குள் வந்து வாசம் பண்ணுவதைக் குறித்தாகும். ஆகையால் **கீர்த்தனங்கள் பாடி சந்தோஷப்படுங்களென்று** கூறுகின்றார்.

தேவ பிள்ளைகளே! எங்கள் **மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள்** உங்களுடன் **வசிப்பதற்கு** வரப் போகின்றார் என்று நீங்கள் அறிந்துக் கொண்டிருந்தால் எவ்வளவாக **சந்தோஷப்படுவீர்கள்?** நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாதபடி **ஆச்சரியத்தால்** சிலையைப் போன்றிருப்பீர்கள். அப்படியானால் எங்கள் இரட்சகர் **இயேசுகிறிஸ்து** எமது **உள்ளத்தில்** வாசம் பண்ண போகின்றார் என்பதனை நீங்கள் அறிந்துக் கொள்ளும் போது நீங்கள் **சிந்திப்பது** என்ன? தேவன் உங்கள் **தகுதியை பாராது** உங்கள் **நிலையை பாராது பரிசுத்த ஆவியானவராக** உங்களுக்குள் வந்து **வாசம் பண்ணுகிறார்.** அப்படியாகச் செய்வது உங்களை **அளவுக்கதிகமாக** நேசிப்பதனாலாகும். நீங்கள் தேவனின் **படைப்புக்களிலேயே உயர்ந்தவராக இருப்பதினாலாகும்.** உங்களை ஆசீர்வதிக்கும் உன்னதரான கர்த்தர் அவரே. என்னுடைய ஜனங்கள் என்று **உரிமையோடு** அழைக்கின்றார். **இன்று வெற்றிகரமான நாள்!**



ஜெபம்

என தேவனே! நீங்கள் என்னிடம் வந்து பரிசுத்த ஆவியானவராக எனக்குள் வாசம் பண்ணுகிறபடியால் நன்றி. தேவனே! நான் உங்களை முழு உள்ளத்தோடு நேசிக்கின்றேன். எந்நாளும் நீங்கள் என்னோடே கூட இருக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்." (பரி:யோவான் 14:18)

**ஜீவ மன்னா**

**பெப்ரவரி 13**
**வியாழன்**

# குற்றமற்றிராதவனையும் கூடத் தப்புவிக்கும் தேவன் !

**இன்றைய வேதவாசிப்பு**
சங்கீதம் அதி: 57 – 58

**"குற்றமற்றிராதவனையுங்கூடத் தப்புவிப்பார்; உம்முடைய கைகளின் சுத்தத்தினிமித்தம் அவன் தப்பிப்போவான் என்றான்."** (யோபு 22:30)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.*** ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்துக் கொண்டு தேவனாகிய **இயேசுகிறிஸ்துவின்** சரீரத்தில் எங்களுக்காக அவர் ***சிந்திய பரிசுத்த இரத்தத்தினால்*** எங்கள் ***பாவங்கள்*** அனைத்திற்கும் ***பாவ மன்னிப்பு*** பெற்றுக் கொண்ட நாம் அனைவரும் ***பாக்கியவான்கள்.*** ஆகையால் உங்கள் உள்ளம் ***கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட ***யோபு 22:30***இல் எழுதப்பட்டுள்ளதாவது ***குற்றமற்றிராதவனையும்*** கூட தேவன தப்புவிப்பார் என்பதாக. உம்முடைய கைகளின் இந்த தேவ வசனத்தின் முதல் பகுதியில் குறிப்பிடப்படுகின்ற காரியம் அதி விஷேசமானது ஏனென்றால் ***குற்றமற்றிராதவனைக்*** கூட எங்கள் தேவன் ***தப்புவிப்பார்*** எனக் கூறப்படுகின்றது. இன்றைய நாளில் இந்த தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் முதல் ***தடவையாக ஜீவ மன்னா*** தின தியானங்களுக்கூடாக பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற ***சிருஷ்டிப்பின்*** தேவனைக் குறித்தும் தேவனின் குமாரனான ***இயேசுகிறிஸ்துவைக்*** குறித்தும் அறிந்து கொண்டீர்களா? நீங்கள் ***கவலைப்படாதீர்கள்!*** இவ்வளவு காலமாக உங்கள் வாழ்க்கையில் இருந்த அனைத்து ***பாவங்கள் தவறுகளைக்*** குறித்து இன்னுமாக ***கவலைப்படாதீர்கள்!*** இன்றைய நாளில் உங்கள் ***முழு உள்ளத்தோடு*** உங்கள் வாழ்க்கையை உங்கள் ***சிருஷ்டிப்பின்*** தேவனுக்கு ***அர்ப்பணித்து இயேசுகிறிஸ்து*** எங்களுக்காக ***சிந்திய பரிசுத்த இரத்தத்தில்*** உங்கள் வாழ்க்கை முழுவதுமாக கழுவிப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

தேவ பிள்ளைகளே! இன்னுமாக உங்களைக் குறித்து தேவனிடம் மன்றாடுகிற மகனின், மகளின் ***பரிசுத்த, நீதி*** நிறைந்த வாழ்வின் நிமித்தமாக உங்களைத் தப்புவிப்பார் என ***யோபு 22:30***இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்களைக் குறித்து தேவனிடம் மன்றாடுகிற உங்கள் சிநேகிதன், அல்லது சிநேகிதி காரணமாக இன்றைய நாளில் உங்கள் வாழ்க்கையை தேவன் மீட்டுக் கொண்டார். ஆகையால் உங்கள் வாழ்வில் இருக்கின்ற ***பிரச்சினைகள், உபத்திரவங்கள், துன்பங்கள், சவால்கள்*** காரணமாக ***சோர்வடைந்த*** உங்கள் உள்ளத்தை இன்றைய நாளில் ***பெலப்படுத்திக்*** கொள்ளுங்கள். ***திடமனதுள்ளவர்களாக*** வாழ்க்கையின் ***சவால்களுக்கு முகங்*** கொடுங்கள் எங்களைப் ***படைத்த*** தேவன் உங்களை அளவு கடந்த அன்பினால் அரவணைத்துக் கொள்வாராக! உங்கள் வாழ்வில் காணப்படும் ***பலவீனங்கள்,*** குறைகள் ஆகியவற்றை பார்க்காது உங்களைக் குறித்து செய்யப்படுகின்ற ***மத்தியஸ்த ஜெபத்தைக்*** கேட்டு மீட்டுக் கொள்ள இன்றும் கிரியை செய்வாராக! ***இன்று வெற்றிகரமான நாள்!***

**ஜெபம்**

தேவனே! படைப்பின் தேவனாகிய நீங்கள் மனிதர்களை வெகுவாக நேசிக்கின்றீர்கள். மத்தியஸ்த ஜெபத்தைக் கேட்டு நீங்கள் அவர்களை மீட்டுக் கொள்கிறீர்கள். இன்றைய நாளில் நீங்கள் என்னையும் மீட்டுக் கொள்ளுங்கள்.இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது."
(யாக்கோபு 5:16)

ஜீவ மன்னா
பெப்ரவரி 14
வெள்ளி

**தேவன் பேரில் விசுவாசங் கொண்டவர்களுக்கு தமது மகிமையை காணச் செய்வார் !**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 59 – 60

**"அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்."** (பரி.மத்தேயு 9:28)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு அருமையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற மனிதர்கள் அவர்களது அறிவில் அவர்களது **திறமையில் புதிதானவைகளை பிறப்பிக்கின்றார்கள்** .அவைகள் **துறைகளைச்** சார்ந்தவைகளாயினும் அவை அனைத்திற்கும் மேலாக எங்கள் **படைப்பின்** தேவனின் கிரியைகள் **அதிசயமானவைகளும், அபூர்வமானவைகளாகும்.**

தேவ பிள்ளகளே! **அரூபியாக** வாசம் **பண்ணும்** தேவனாகிய கர்த்தரின் **அற்புதமான** செய்கைகள் மனிதனாலே செய்ய முடியாதவைகள். பிறப்பிலேயே **குருடு, ஊமை செவிடு, அங்கவீனம், அவலட்சணமாக** பிறந்த மனிதர்கள் உலகில் இருக்கின்றார்கள். ஆனாலும் **வைத்திய விஞ்ஞானத்தில்** அவர்களுக்கு **சுகம்** பெற்றுக் கொள்ள முடிவதில்லையெனவும் நாம் அறிந்திருக்கின்றோம். ஆனாலும் **தாயின் வயிற்றிலிருந்து குருடு, செவிடு, ஊமை, அங்கவீனர்களாக** பிறந்தவர்கள் எங்கள் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சுகத்தைப் பெற்று வாழ்கின்றார்கள். மேலும் அப்படியான அநேக சாட்சிகளைத் நாங்கள் கேட்டிருக்கின்றோம். ஆகையால் தேவன் பேரில் **விசுவவாசங்** கொண்டிருக்கின்ற நீங்கள் மிக **அதிர்ஷ்டக்காரர்கள்** ஆவீர்கள். தேவனானவர் உங்கள் மீட்பராகிய தேவன் என்பதை உங்கள் முழு **உள்ளத்திலும்** ஏற்றுக் கொள்ளும்படியாக உங்கள் உள்ளம் **திறக்கப்பட்டமையைக்** குறித்து **சந்தோஷப்படுங்கள்.** ஏனென்றால் **பெரும்பாலான** மனிதர்கள் **இயேசுவானவரைக்** குறித்து கேட்டு, அவரது **அற்புத** செய்கைகளைக் குறித்ததான சாட்சிகளைக் கண்டும் தேவனை **விசுவாசிக்க** அவர்களது உள்ளம் இடம் கொடுப்பதில்லை. ஆகையால் அவரது **வல்லமையான** கிரியைகளை அவர்கள் **அநுபவிக்கவும்,** காணவும் முடிவதில்லை.

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பரி.மத்தேயு 9:28**இல் **இயேசுகிறிஸ்துவிடம்** வந்த **குருடர்கள்** இருவரிடம் தேவன் கூறியதாவது, உங்களைக் **குணமாக்க** எனக்கு **வல்லமையுண்டென்று விசுவாசிக்கிறீர்களா?** என்றாகும். அவர்கள் ஆகும் ஆண்டவரே விசுவாசிக்கின்றோம் என்று பதில் கொடுத்த பிறகு தேவன் அவர்களது **கண்களைத் தொட்டு** உங்களது விசுவாசத்தைப் போல் உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களது **கண்கள் திறக்கப்பட்டது.** என எழுதப்பட்டுள்ளது. நீங்கள் இயேசுவின் பேரில் எவ்வளவாக **விசுவாசங்** கொண்டிருக்கிறீர்கள்? அவ்வளவாக இன்றும் அவரது தேவ இரக்கத்தை **அநுபவிக்க** போகின்றீர்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**



ஜெபம்

என் தேவனே! இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசங் கொள்ளுபவர்கள் உண்மையாக அதிர்ஷ்டக்காரர்கள்ஆவார்கள். தேவனே, உங்கள் மகிமையைக் காணும்படியாக எனக்கு கிருபையளித்தருளுங்கள். என்னுடைய விசுவாசத்தை பெலப்படுத்துங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்." (பரி.மத்தேயு 21:22)

ஜீவ மன்னா
பெப்ரவரி 15
சனி

## நீங்களும் பெலனடையுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 61 – 62

**"நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்;..."** (உபாகமம் 31:6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கிறவராகிய வல்லமையின் தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தால் இன்றும் **சுபநாளாக** அமையும்படி வாழ்த்துகின்றேன். இப் பூச்சக்கரத்தில் வாழும் சகல ஜனங்களிலும் நானும் நீங்களும் **பாக்கியவான்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய்** இருப்பது ஜீவனுள்ள தேவனை அறிந்தவர்களாய் இருப்பதனாலாகும். உலக இயல்பின் பிரகாரமாக நம் வாழ்வில் நாம் சந்திக்கும் பிரச்சினைகள், துன்பங்கள், கஷ்டங்கள் நிமித்தம் நாம் சோர்வடைந்து தைரியத்தை இழந்து விடாதபடி எம்மை உருவாக்கியவர் எம்மை **ஆறுதலடையச்** செய்கிறார்.

தேவ பிள்ளைகளே! பரிசுத்த ஆவியானவர் எமக்குள் வாசம் பண்ணுகிறபடியால் எம்மை எதிர் கொண்டு வரும் எல்லா இன்னல்கள் பிரச்சினைகளின் மத்தியில் அவருடைய ஜீவ **வார்த்தைகளைக்** கொண்டு எம்மை **பெலப்படுத்துகிறார்.** தைரியப்படுத்துகிறார். இதை இன்றைய தின செய்தியின் பிரதான வசனம் **பலங் கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடே கூட வருகிறார்** என்பதாக வெளிப்படுத்துகிறது. ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** நீங்கள் சோதனைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய வேளைகளில் **ஐயோ ஏன் எனக்கு இப்படி நேரிடுகிறது** என கலங்கி தவிக்காதீர்கள். உங்களோடிருக்கும் உங்களை உருவாக்கின தேவன் **யாவற்றையும் செய்ய வல்லவர்** என்பதை உணர்ந்து விசுவாசத்தோடு யாவற்றையும் அர்ப்பணித்து **ஜெபியுங்கள்.** இல்லாவிடில் எம் எதிராளியாகிய சாத்தான் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஆண்டவரைக் குறித்து எம் உள்ளத்தில் இருக்கும் விசுவாசம், அன்பு போன்றவற்றை **பறித்துக்** கொண்டு தேவனை விட்டு எம்மை **தூரமாக்கி** விடுவான்.

தேவ பிள்ளைகளே! எமது **மனதை** குழப்பி உள்ளத்தை அதைரியப்படுத்தி எம்மை தேவனுக்கு விரோதமாக பிழைகள், பாவங்கள், செய்யும்படியாக சாத்தான் எம்மை தூண்டி விடுவான். ஆகையால் நீங்கள் அதைரியத்திற்கு **இடம் கொடாதபடி** ஆண்டவரைக் குறித்து முழு உள்ளத்தோடு **விசுவாசத்தோடு** ஜீவியுங்கள். தேவ வார்த்தைகளை தினந்தோறும் உச்சரித்து உங்கள் உள்ளத்தை **பெலப்படுத்துங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் அன்புத் தகப்பனே! உங்கள் பரிசுத்த ஆவியானவரின் நிமித்தமாக நன்றி கூறுகின்றேன். என்னோடிருப்பவரே! என்னைப் பெலப்படுத்துகிறவரே! நன்றி தகப்பனே! இன்றும் என்னோடு இடைப்படுங்கள்.என்னை நடத்துங்கள். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்." (சங்கீதம் 28:8)

ஜீவ மன்னா

பெப்ரவரி **16**

ஞாயிறு

## நீதிமான்கள் மத்தியில் வாசம் பண்ணும் பரிசுத்த தெய்வம் !

**இன்றைய வேதவாசிப்பு**


**சங்கீதம் அதி: 63 – 64**

**"நான் அசைக்கப்படுவதில்லை, தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்."** (சங்கீதம் 10:6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எம் ஆண்டவரும் மீட்பின் கன்மலையுமாகிய ஜீவனுள்ள தேவனின் திரு நாமத்தால் இன்றும் **நன்மைகளால் நிறையப் பெற்ற நாளை** காணும்படி வாழ்த்துகின்றேன். மனிதனாய் இம் மண்ணில் பிறந்த நாமனைவரும் **அதிர்ஷ்டமானவர்களே.** ஆயினும் இத் தரணியில் ஜீவிக்கும் காலமெல்லாம் அநேக வேதனைகளுக்கும், துன்பத்துயரங்களுக்கும், இன்னல்களுக்கும் முகங் கொடுக்கும்படியான நிலமைகள் ஏற்படுகிறது இச் சூழ் நிலைகளின் நிமித்தமாய் எமது ஆத்துமா சோகத்திற்கும், வேதனைக்கும் உட்படுகிறது இதனால் எம் வாழ்க்கை சிதறி போகக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகிறது. ஒரு நல்ல வளமான வாழ்க்கை கிடைக்காதபடி நம்பிக்கை இழந்து வாழ்க்கைப் பாதையில் முன்னேற முடியாதபடி கைவிடப்பட்ட நிலையில் இருந்த போதிலும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட **சங்கீதம் 10:6**இன் வேத வசனம் கூறுகிறது **நான் அசைக்கப்படுவதில்லை, தலைமுறை, தலைமுறை தோறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்.** என்பதாக. ஆகையால் இன்றைய தினத்திலும் துன்ப துயரங்கள், இன்னல்கள், சவால்கள் மத்தியில் கடந்து செல்பவராக இருப்பின் மிகவும் துக்கத்தில் வாழும் நீங்கள் இந்த வசனத்தை முழுமையாக **விசுவாசியுங்கள்.** ஆயினும் **சங்கீதம் 10:4**இன்படி **துன்மார்க்கனைக்** குறித்தே எழுதப்பட்டிருக்கிறது. **துன்மார்க்கன் தன் கர்வத்தினால் சொல்லிக்** கொள்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் தேவனுடையவர்களே! **துன்மார்க்கனுடைய வழிகள் யாவும் தேவனுக்கு வெறுப்பானதாகும். ஆனால் உத்தமர்களை, நீதிமான்களை, தேவன் நேசிக்கிறார். அவர் துன்மார்க்கரிடம் விலகி தூரமாய் இருக்கிறார். நீதிமான்களுடைய ஜெபத்திற்கோ பதிலளிக்கிறவராக இருக்கிறார்.** என்று வேத வசனம் கூறுகிறது. ஆகையால் துன்மார்க்கனோடு அல்ல **நீதிமான்களோடு** தேவன் **வாசம்** பண்ணுகிறார்.

தேவ பிள்ளைகளே! தேவனாகிய கர்த்தரை விசுவாசித்து அவரது வார்த்தைகளை கட்டளைகளுக்கு கீழ்படிந்து உத்தமர்களாக ஜீவிக்கிறவர்களோடு, உங்களோடு, உங்கள் குடும்பத்தினரோடு, தேவன் வாசம் பண்ணுகிறார். அவர் நீதிமான்களின் ஆண்டவர் ஆகையால் அவரை விசுவாசிக்கும் உங்களை ஒரு போதும் கைவிடமாட்டார். இன்று நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், சங்கடங்கள், இன்னல்கள் துன்பங்கள் யாவும் அது எவ்வளவு பெரியதாக இருந்த போதிலும் அவற்றை நீக்கிவிட அவர் வல்லவர். நீங்கள் நீதிமானாயிருந்தால் உங்களையும் உங்கள் சந்ததிகளையும் ஆசீர்வதிப்பார். **தேவ அனுக்கிரகத்தின் நாள்!**



ஜெபம்

என் தேவனே! என் பிதாவே, நீதிமான்களோடு வாசம் பண்ணுபவரே! என்னையும் பரிசுத்தமானவனாக மாற்றிக் கொண்டவரே நன்றி. நீங்கள் என்னோடிருப்பதால் எந்த ஆபத்தும் என்னை அணுகாதபடி என்னை காக்கிறவரே நன்றி. இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்." (சங்கீதம் 92:12)

ஜீவ மன்னா

பெப்ரவரி 17 திங்கள்

உங்களுக்கு சகலமும் நன்மையாகவே ஒருமித்து கிரியை செய்கிறது !

இன்றைய வேதவாசிப்பு

சங்கீதம் அதி: 65 – 66

**“தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம்முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை.”** (ஏசாயா 64:4)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் மலர்கின்ற இந்தப் **புதிய நாள் ஆசீர்வாதத்தின் நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** பரத்திலிருந்து கிரியை செய்யும் மகோன்தமான தேவ பிதாவானவருடைய புத்திரர்களாய் எம்மை தெரிந்துக் கொண்டு எம் வாழ்வின் எல்லாச் சித்தங்களையுஞ்மட உயர்வாக நிறைவேற்றி எம்மை வெற்றியின் பாதையில் வழி நடத்துகிறார். ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவனுடையவர்களே! உங்கள் தாய் அல்லது தகப்பன் இல்லாவிடில் சகோதரனாவது, சகோதரியாவது, அல்லது யாராவது உறவினர்கள் எவராகிலும் வெளிநாட்டிலிருந்து உங்கள் பெயருக்கு **பரிசுப் பொதி** ஒன்றை அனுப்பியிருந்தால் நீங்கள் மிக வியப்புடன் மகிழ்ச்சியோடு அதில் என்ன இருக்கிறது என பார்க்கும் ஆர்வத்துடன் அதை ஆவலாய் பொறுமையின்றி பிரிந்து பார்க்க முனைவீர்கள் அல்லவா? அதே போல் கர்த்தர் மேல் விசுவாசம் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை அவருக்கே அர்ப்பணித்து அவருடைய **ஒத்தாசையை** எதிர்பார்த்து காத்திருப்பவர்களை குறித்து அவர் எப்படியான **அற்புதங்களையும், புதுமைகளையும், மகத்தானவைகளையும், பெரியவைகளையும்** செய்வார். என்பதை அறிந்துக் கொள்ளும் பொருட்டு நீங்கள் விருப்பமுடையவர்களாய் இருக்கிறீர்கள் அல்லவா? ஆரம்ப தேவ வார்த்தை வெளிப்படுத்துகிறது. **அவரைப் போல் தம் சொந்த பிள்ளைகளுக்காக செயல்படுகிற வேறே தெய்வம் என்றும் இருந்ததில்லை** என்பதாக.

அன்பார்ந்தவர்களே! குறுகிய காலத்திற்குள் உங்கள் வாழ்வினை சுபீட்சமடையச் செய்ய அவர் **வல்லவர்.** நான் இப்படி வல்லமையுள்ள **தேவ தாசனாக** மாறும் முன்பாக ஒரு தனியார் தொழில் ஸ்தாபனம் ஒன்றில் **வாகனம் ஓட்டுணராக** (டிரைவர்) வேலை செய்தேன். ஆனால் தற்போது தேவ அழைப்பின் பேரில் ஒரு வல்லமையான **தேவ அடியாராக** ஊழியம் செய்கிறபடியால் மனிதர்கள் மூலம் **கௌரவிக்கப்படுகிறேன்.** தேவனுக்கே மகிமை. உங்கள் வாழ்க்கையிலும் தேவனுடைய மேலான **உயர்ந்த திட்டம்** செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. **பரிசுப் பொதியிலே என்ன இருக்கிறது** என்பதை நீங்கள் அறியாதிருப்பது போல் ஆண்டவரின் உயர்ந்த நோக்கம் என்ன என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். விசுவாசத்தோடு தேவனை நோக்கி கண்களை ஏறெடுங்கள். உங்கள் தேவைகள் யாவையும் அவர் சம்பூர்ணப்படுத்துவார். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

படைப்பின் தெய்வமே! உங்கள் சொந்த ஜனங்களை கைவிடாதவரே! உம்மை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பவர்களின் சகல காரணங்களையும் நிறைவேற்றுகிறவரே! இன்றைய தினத்திலும் என் காரணங்கள் நிமித்தமாய் நீங்கள் செயல்படும்படியாக இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்.” (சங்கீதம் 94:14)

ஜீவ மன்னா

பெப்ரவரி 18

செவ்வாய்

**எம் வாழ்வின் உறுதியான காப்பகமான கன்மலையான இயேசுகிறிஸ்து !**

இன்றைய வேதவாசிப்பு

சங்கீதம் அதி: 67 – 68

**"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்."** (சங்கீதம் 91:2)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் சகல ஆசீர்வாதங்களுடன் கூடிய **நன் நாளை சுவீகரித்துக்** கொள்ளும்படியாய் வாழ்த்துகிறேன். உதயமாகிற இப் புதிய நாளில் இக் காலைப் பொழுதினிலே **ஜீவ மன்னா** என்கிற இத் தியானத்திற்கூடாய் உங்களை சந்திப்பதற்காய் நான் என் தேவனை துதிக்கிறேன். நிலையற்ற இவ்வுலகத்தில் நாளைய தினமோ எம் வாழ்க்கையோ நம்பிக்கையற்றதாகும். ஆயினும் நாம் **பாதுகாப்பை** பெற்றுக் கொள்ளவும் **அடைக்கலமும், கோட்டையுமான** எம் தேவன் எம்மோடு கூட இருப்பதால் நாம் **பாக்கியவான்களாக** இருக்கிறோம்.

தேவ பிள்ளைகளே! இலங்கை வாழ் ஜனங்கள் மத்தியில் எங்கள் **அடைக்கலமான** ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினால் தமது சொந்த ஜனமாக மாற்றப்பட்டது நாம் பெற்றுக் கொண்ட **உன்னதமான வரப்பிரசாதமே.** எமக்கு இப் பூமியில் கிடைக்கும் பாதுகாப்பும், அடைக்கலமும் உறுதியானது என நம்ப முடியாது. இயற்கையின் **அனர்த்தங்களான சூறாவளி, புயற் காற்றினால்** அநேக நாடுகளில் மிக பலம் பொருந்திய கட்டிடங்கள், மிக நுட்பமாக, சக்தியுள்ளதாக கட்டப்பட்ட கடலைப் பாலங்கள் கூட உடைந்து சிதறி அழிந்து போகிற சந்தர்ப்பங்களை காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் அகிலத்தையும் ஆகாயத்தையும் படைத்து பராமரித்து வரும் கர்த்தர் எம் பரமபிதா அரணாக இருப்பதால் எவ்வளவு பயங்கரமான ஆபத்துக்கள் எம்மை எதிர்க் கொண்டாலும். அவரின் **பாதுகாப்பு உறுதியானதாக** இருக்கிறது.

அருமையானவர்களே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்கள் அன்றாட ஜீவியத்தில் ஏற்படும் பிரச்சினைகள், வெறுப்புகள், பிரிவினைகள், மனஸ்தாபங்கள், சண்டைகள், வாக்குவாதங்கள் மனிதர்கள் உங்களுக்கு விரோதமாக செய்யும் நடவடிக்கைகளின் நிமித்தமாகவோ நீங்கள் **துயரப்படாதிருங்கள்.** எவருக்கும் விரோதமாக எதிர் கிரிகைகள் செய்யாதிருங்கள். சகலவற்றிலிருந்தும் **விடுவிக்க** ஆண்டவரால் கூடும் சகலவற்றையும் ஆண்டு வழிநடத்தும் இறைவன் மீது விசுவாசம் கொண்டுள்ள உங்களை **வெட்கப்படவிடார்.** தேவன் உங்கள் **பாதுகாப்பாக** செயல்படுகிறவராக உங்கள் வாழ்வை அமைதியாக முன் நடத்திச் செல்வார். உங்களுக்கும் உங்கள் முழு குடும்பத்திற்கும் **அரணான கோட்டை** அவரே. **வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தஞ்சமான ஆண்டவரே! என்னைப் பாதுகாக்கும்படியாக என் கோட்டையுமானவரே! இன்றும் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிற என்னை என் பகைவர்களிடமிருந்து பாதுகாக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்."
(யோவேல் 3:16 )

ஜீவ மன்னா
பெப்ரவரி 19
புதன்

## சிறுமைப்பட்டவர்களை ஆசீர்வதித்து உயர்த்தும் அடைக்கலப் பாறையான கிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 69 – 70

**"சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் என்று சொல்லி, நீங்கள் அவனுடைய ஆலோசனையை அலட்சியம்பண்ணினீர்கள்."**
(சங்கீதம் 14:6)

அன்பார்ந்த பிரியமும் வாஞ்சையுமுள்ள தேவ பிள்ளைகளே! சதாகாலங்களிலும் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றைய **தினத்திலும் நன்மையும் கிருபையும்** கடந்து வருமாறு **ஆசீர்வதிக்கிறேன்.** படைப்பின் கர்த்தர் தாமே தமது சுயாதீனத்தின்படி உங்களை தமது **சொந்த பிள்ளைகளாக** வேறு பிரித்துத் தெரிந்துக் கொண்டபடியால் உங்களை போல் **அதிர்ஷ்டசாலி** வேறு எவரும் இல்லை என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் முழு உலகத்தையும் உருவாக்கி ஆண்டுவருபவர் சர்வ வல்லமையின் தேவன். வானத்திலும் பூமியிலும் **அவரால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை.**

தேவ பிள்ளைகளே! எம் செய்தியின் முதல் தேவ வசனம் உரைக்கிறது **சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் என்றுச் சொல்லி நீங்கள் அவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணீர்கள் என்று உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** ஆண்டவர் உங்கள் **தராதரத்தை, திறமைகளை** பார்க்கிறவர் அல்ல யாரிடமும் உங்களைக் குறித்து **விசாரித்தறிகிறவரும்** அல்ல. உங்களை தமது பிள்ளையாக தமது விருப்பத்தின்படி தெரிந்துக் கொண்டார். நீங்கள் தாயின் கர்ப்பத்தில் உருவான நாள் முதல் இன்றைய தினம் வரையில் உங்கள் குண இயல்புகளையும், **சுபாவத்தையும்** அவர் நன்கு அறிவார். இவைகளை **அறிந்தவராய்** இருந்தும் தமது சொந்த அபிப்பிராயத்தின் பேரில் தமது சொந்தமாக்கிக் கொண்டது அவர் உங்கள் மீது கொண்ட பேரன்பினாலேயே. அதுமாத்திரமல்ல, நீங்கள் **வறிய குடும்பத்தில்** பிறந்தவராயினும் உங்களை உருவாக்கிய படைப்பின் **தேவனுடைய பிள்ளையாக** இருக்கிறீர்கள். உங்கள் ஏழ்மையைக் குறித்துக் **கவலைப்படாதீர்கள்.** அவருடைய ஆசீர்வாதம் உங்களை **செல்வந்தராய்** மாற்றும்.

பிரியமானவர்களே! **சிறுமைப்பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார்** என வேதவசனம் கூறுகிறது. ஆகையால் **மனந் தளராதிருங்கள்.** உங்களை வெட்கப்படுத்தவோ **ஏழ்மையின்** நிமித்தம் உங்களை அலட்சியப்படுத்தவோ ஒருவருக்கும் அவர் இடங்கொடுக்க மாட்டார். கனப் பொழுதிலே உங்களை பெரிய **செல்வந்தனாக** மாற்ற அவரால் கூடும். உங்கள் **இயலாமையை** அறிந்தவர்கள் உங்களுக்கு விரோதமாக காரியங்கள் செய்ய முயற்சிகள் செய்தாலும் அவர்கள் வெட்கப்பட்டு போகுமாறு செய்வார். அவர் உங்கள் **ஏழ்மையை வறுமையை** தூரமாக்கி உங்களை **ஆசீர்வதிப்பார். நல்ல நாள்!**

ஜெபம்

என் பரலோகத் தகப்பனே! நீங்கள் தரித்திரர்களின் அடைக்கலமானவர். சிறுமைப்பட்டவர்களின் தேவனே! என் ஏழ்மையிலும் என்னை தெரிந்துக் கொண்டவரே! என் வறுமையை நீங்கச் செய்து சகலவற்றிலும் என்னை ஆசீர்வதியுங்கள்.இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர்களினின்று எளியவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கும்படி அவர் அவன் வலதுபாரிசத்தில் நிற்பார்." (சங்கீதம் 109:31)

ஜீவ மன்னா

பெப்ரவரி **20**

வியாழன்

## விரோதங்களை அகற்றி நன்மைகளை ஆசீர்வாதமாக்கிக் கொள்ளுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

சங்கீதம் அதி: 71 – 72

**"இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது."** (பரி:மத்தேயு 12:25)

அன்பார்ந்த என் தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு ஆசீர்வாதத்தின் **நல்ல நாளாய்** அமையும்படி வாழ்த்துகின்றேன். இன்றைய தினத்தில் உங்களுக்கு ஒரு நல்ல செய்தியை அளிக்கும்படியாய் தேவன் உங்களோடு **பேசுகிறார்.** ஆத்மீக தேவ பிள்ளைகளாகிய நீங்கள் ஒருவரோடு ஒருவர் **விரோதம்** கொள்ளாமல் இருக்கக்கடவீர்கள் என்கிறார்.

தேவ பிள்ளைகளே! எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து **சமாதானத்தின் குமாரன்** ஆயினும் எமது எதிராளியான சாத்தான் **விரோதங்களை** ஏற்படுத்துகிறவனாய் இருக்கிறான். மேலே தரப்பட்ட வேத வாக்கியம் கூறுகிறது. **தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம், தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது** என்று இயேசுகிறிஸ்து கூறியதாக எழுதப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் உங்கள் குடும்ப அங்கத்தவர் மத்தியில் ஒரு சிறு மனஸ்தாபம் வேறுபாடுகள், வெறுப்புகள் ஏற்படின் அதைப் பெரிதுபடுத்தி குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் இடையே பெரிய விரோதத்தை ஏற்படுத்தி முழு குடும்பத்தையும் **சிதைக்கும்படி** சாத்தான் தேவவசனத்தைப் **பயன்படுத்தி** விடுவான். ஆகையால் **சாத்தான்** உங்களுக்கு விரோதமாக கொண்டு வரும் **திட்டங்களை** குறித்து கவனமாயிருங்கள். இல்லங்களில் கணவன் மனைவி, பிள்ளைகள் என்று மிக சந்தோஷமாக வாழும் போது இந்த குடும்பத்தை சீர் குலைக்கும்படி சாத்தான் கணவனையோ, மனைவியையோ, **வெளியூர் சென்று பணம் சம்பாதிக்க வேண்டும்** என்கிற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி விடுவான். இதற்கான முயற்சிகளை மேற் கொள்ளும் போது ஒருவருக்கொருவர் மன பேதங்களையும், விரோதங்களையும் உண்டு பண்ணி அதை பிள்ளைகள் மத்தியிலும் பரவச் செய்து ஒவ்வொருவரையும் வேறு பிரித்து குடும்பத்தை **சீர்கேடடையும்படி** செயலாற்றுவான்.

தேவ பிள்ளைகளே! **தேவ அன்பினால்** பிணைக்கப்பட்ட நீங்களும் உங்கள் குடும்பத்தினர் யாவரையும் **பாதுகாத்து** வாழ்க்கையில் **நல்ல சுவுகளை** அநுபவிக்க உங்கள் யாவருக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். இயேசுகிறிஸ்து வாசம் பண்ணும் உங்கள் குடும்பம் **பாக்கியமுள்ளதாயிருக்கும்.** இன்றும் உங்களுக்கு **சுப நாள்.**

ஜெபம்

என் தேவனே! எங்கள் இரட்சகராகிய ஆண்டவரே சாத்தான் என்னிலும்
குடும்பத்தார் மத்தியிலும் ஏற்படுத்த முயற்சிக்கும் விரோதங்கள்,
மனக்கசப்புகளை நீக்கி அவன் கொண்டு வரும் யோசனைகளை
நிர்மூலப்படுத்தி எம்மைக் காத்தருளுமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்." (1 பேதுரு 4:8)

ஜீவ மன்னா
பெப்ரவரி 21
வெள்ளி

# கைவிடப்பட்டு நொந்து போனவர்கள் நிமித்தம் பரிதபிக்கும் மனதுருக்கத்தின் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 73 – 74

**"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,"** (பரி.மத்தேயு 9:36)

அன்பார்ந்த எனக்கருமையான தேவனுடைய பிள்ளைகளே! உயிரோடிருக்கிறவரும் நம்மில் வாசம் பண்ணுகிறவருமான ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினால் **இன்றும் மகிழ்ச்சியாய் வாழ வாழ்த்துகிறேன்.** ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் **முகத்தைக்** காணலாம். அவனின் உருவத்தை காணலாம். ஆனால் அவனுடைய **உள்ளத்தையோ சிந்தைனைகளையோ** காண முடியாது. ஆனால் எம் தேவன் மனிதர்களின் **உள்ளத்தை சிந்தைனைகளை ஆத்துமாவை** காண்கிறார். அவற்றைக் குறித்து நன்கு அறிந்திருக்கிறார்.

பிரியமானவர்களே! உங்கள் ஜீவியத்தில் காணப்படும் எல்லாவிதமான பிரச்சினைகள், துன்பங்கள், கஷ்டங்கள், **சரீர வேதனைகள்** உங்கள் ஆத்துமாவின் **நொந்து** போன நிலமை **பரிதாபத்துக்குரிய** சகலவற்றையும் அவர் நன்கு அறிவார். எமது செய்தியின் தலைப்பின் வசனம் உரைக்கிறது **திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்களை மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகி** என்று. இதின் உள்ளர்த்தம் ஆத்துமீக வெளிபாடு **அவர்களின் ஆத்துமாவை சரியான பாதையில் நடத்திச் செல்ல யாரும் இல்லாதபடி அவர்கள் கைவிடப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்** என்பதே. அன்பார்ந்தவர்களே! மனிதனுடைய **ஆத்துமா** செழித்து வாழ்கிறது போல் அவனுடைய வாழ்வும் **செழிப்பாய் மாறும். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இன்றைய நாளில் ஆண்டவர் உங்கள் நல்ல மேய்ப்பனாய் இருக்கிறபடியால் ஆத்துமீக, லௌகீக ஆசீர்வாதங்களை குறையின்றி நிறைவாய் பெற்றுக் கொள்ள வழிகாட்டுவார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் **இயலாமையைக்** குறித்து மற்ற மனிதர்களிடம் சொல்லி **உதவியை பெற்றுக்** கொள்ள முற்படாதீர்கள். மனிதர்கள் உங்கள் **உள்ளத்தின் வேதனைகளை** முழுவதுமாய் உணரமாட்டார்கள். ஆனால் **தேவ ஆவியானவர்** உங்கள் உள்ளத்தில் வசிப்பதால் அவர் உங்கள் உள்ளத்தின் வேதனைகளை **நன்றாகவே அறிவார்.** ஆனால் உங்கள் துக்கம், வேதனை, இல்லாமை, இயலாமை எல்லா குறைபாடுகளையும் அவருக்கு முன்பாக அறிக்கைப் பண்ணி அவருடைய அளவில்லா **கிருபையைப்** பெற்றுக் கொள்ளுங்கள். **வெற்றியின் நாள்!**



ஜெபம்

என் தேவனே! சதாகாலங்களிலும் தேவனானவரே! உங்கள் ஒரே குமாரன் இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாய் உங்களை ஸ்தோத்தரிக்கிறேன். நீங்கள் தாமே மனிதர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளாய் கைவிடப்பட்டு சரியான பாதைய அறியாதிருக்கிறபடியால் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு வழி நடத்துகிறவராய் இருக்கிறபடியால் எம் மீது உங்கள் மனதுருக்கத்தை வெளிப்படுத்தும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள்மேல் ஏற்படுத்துவேன்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை, கலங்குவதுமில்லை, காணாமற்போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 23:4)

ஜீவ மன்னா

பெப்ரவரி **22**
சனி

## அதிசயங்களை அற்புதங்களை காணச் செய்யும் நிகரில்லா தேவன் !

**இன்றைய வேதவாசிப்பு**
சங்கீதம் அதி: 75 – 76

**"பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?"**
(யாத்திரகாமம் 15:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் **இன்றைய நாள்** ஆசீர்வாதத்தின் நாளாக விளங்கும்படி வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். இப் புவிதனில் அநேக மதங்களுக்கூடாக தர்மத்தின் கிரியைகள் நடந்துக் கொண்டிருக்கும் போதும் அநேக ஆவிகளின் வல்லமைகளும் கிரியை செய்துக் கொண்டிருக்கிறது. இவைகளிலே மனிதர்களுக்கு தீமைகளை விளைவிக்கும் ***அசுத்த ஆவிகளின் கிரியைகளை*** நாங்கள் ***காண்கிறவர்களாகவும், கேட்கிறவர்களாகவும்*** இருக்கிறோம். ஆயினும் இவைகள் சகலவற்றையும் விட எங்கள் இரட்சகர் ***இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையில்லாக் கிருபை*** சகல ***வல்லமையோடு நயகரா நீர்வீழ்ச்சியைப்*** போல் மக்கள் மத்தியில் **பெருக்கெடுத்தோடிக்** கொண்டிருக்கிறது.

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனின் ***கிருபைக்கும் வல்லமைக்கும்*** இணையாக நிகராக இம் மண்டலத்தில் எதுவும் கிடையாது. ஏனெனில் இம் ***மனுகுலத்தின்*** மீது தேவன் காட்டும் அளவு கடந்த அன்பின் நிமித்தமாக கடந்து வரும் ***கிருபையின் வல்லமை அற்புதங்களை காணச்*** செய்கிறது. அவர் புதுமைகளை செய்யும் ***விஷேசித்த ஞானமுள்ளவர்.*** ஒரு துறையில் ஆர்வமுள்ள ஞானமுள்ள மனிதன் அதைக் குறித்து மிக ***விரிவான அறிவும், ஞானமும், திறமையும்*** கொண்டிருந்தால் அத் தொழிலில் அவன் விஷேசித்தவனாய் இருப்பான். மனிதர்களை பொருத்தமட்டில் ஒருவன் ஒரு காரியத்தில் மிகத் ***திறமைசாலியாக விஷேசித்தவனாக*** விளங்குவான். இப்படி மனிதர்களை போலல்ல, மற்ற தேவர்களைப் போல் அல்ல, நம் தேவனுமானவர் ஜீவனுள்ள இயேசுகிறிஸ்து யாவற்றையும் செய்ய வல்லமையுள்ளவர் அவர் சகலவற்றிலும் விஷேசித்தவராவார். ஆகையால் அவருடைய செய்கைகளுக்கு **நிகராக** செயல்பட வேறே **செயல்கள்** கிடையாது. அவர் செய்யும் அவர் புரியும் கிரியைகள் யாவும் அற்புதம் அதிசயமே.

தேவனுடையவர்களே! கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கும் ***திட்டங்களைக்*** குறித்து உங்களுக்கு விளக்கம் தருபவர் அல்ல இதை நான் தனிப்பட்ட வாழ்வின் ***அனுபவத்தில்*** அறிந்துள்ளேன். அவருடைய ***காரியங்களை*** குறித்து அறிந்துக் கொள்ள ***முற்படாத*** என் தேவனாகிய இயேசுகிறிஸ்துவை ***நேசிக்கிறபடியால்*** என் வாழ்க்கை குறிப்பிட்ட இலக்கை நோக்கி கொண்டு செல்லவும் ஏற்ற வேளையில் சகலவற்றையும் நிறைவேற்றித் தரவும் ***வல்லவராய்*** இருக்கிறீர்கள் என விசுவாசித்து அவரை பின்பற்றி செல்வதைக் காண்பதே அவர் விருப்பமாகும். ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!*** நீங்கள் அவருக்கு மிக ***சமீபமாக*** உங்கள் வாழ்வை ***நடத்திச் செல்லுங்கள்.*** அப்போது ஆண்டவர் உங்கள் வாழ்வில் ***அதிசயங்களைக்*** காணச் செய்வார் ***வெற்றி தரும் நாள்!***



ஜெபம்

என் அன்புத் தகப்பனே! அற்புதம் செய்பவரே! உங்களுக்கு ஒப்பானவர் இல்லை. தகப்பனே! இன்னும் அன்பைச் கிட்டிச் சேர அற்புதங்களை பெற்றுக் கொள்ள என் வாழ்வில் அதிசயங்களை காணக் கிருபை தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்."
(யோபு 5:9)

ஜீவ மன்னா
பெப்ரவரி 23
ஞாயிறு

## இடுக்கமென்ற சமுத்திரத்தின் வாழ்க்கை பயணத்தில் எம்மை மீட்கும் ஆண்டவர் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 77 – 78

**"இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில் அவர் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார்;"** (சகரியா 10:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டு அவரில் பிரியமும் வாஞ்சையுமாய் ***ஜீவிக்கும் தேவ பிள்ளைகளே, இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தால் வெற்றிச் சிறந்த நந்நாளைப் பெற்று மகிழும்படியாய் வாழ்த்துகின்றேன்.*** உங்கள் ***ஜீவனுள்ள*** தேவன் ***உன்னதமானவரும்*** கிரியை செய்ய ***வல்லமை*** உள்ளவராகவும் இருக்கிறார். ஆகையால் உங்கள் வாழ்வின் சகல காரணங்களையும் குறித்து ***மிக அவதானத்துடன்*** இருக்கிறார். எப்போதும் உங்களுக்கு ***நன்மைகளை*** செய்யவே ***வாஞ்சிக்கிறார்.*** உங்கள் ***உள்ளம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவனாகிய ஆண்டவர் உங்களை தன்னிடமாக அழைத்துக் கொண்டது உங்கள் மேல் அவர் கொண்ட ***அன்பினாலேயாகும்.*** அவர் உங்களுக்கு காட்டும் ***அளவில்லா*** அன்பினால் உங்கள் வாழ்வில் எந்தவிதமான ***ஆபத்துகளும்*** நேரிடாதபடி உங்களைக் ***காத்துக்*** கொள்கிறார். இன்றைய தின செய்தியின் பிரதான தேவ வார்த்தை ***இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில்*** அவர் ***சமுத்திரத்தின்*** அலைகளை அடிப்பார் என்பதாகும். உங்கள் ஆண்டவர் உங்களை ***எவ்வளவாய் நேசிக்கிறார்*** என்பதை உங்களால் ***அறியமுடிகிறதா?*** அவரின் இந்த அன்பு உங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. ***சமூகத்தில் உயர் பதவி*** வகிக்கும் அதிகாரி ஒருவர் உங்கள் ***உறவினராகவோ, நண்பராகவோ*** இருப்பின் நீங்கள் எப்படி அதைக் குறித்து ***மகிழ்ச்சியடைவீர்கள்?*** உங்களுக்கு ஏற்படும் பெரும் ***பிரச்சினைகளுக்கு*** அவரிடம் ***உபகாரம்*** பெறுவீர்கள் அல்லவா? அப்படியாயின் உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் ***ஆளுகை*** செய்கிறவரும் உங்களை தாயின் ***கர்ப்பத்திலேயே*** அழைத்தவருமான ***ஜீவனுள்ள படைப்பின்*** தேவனுடைய பிள்ளையாக அவருடைய பாதுகாப்பை, அருளை ***ஒத்தாசைகளை*** பெறும் நீங்கள் எவ்வளவாய் ***பேறு பெற்றவர்கள்?***

தேவ பிள்ளைகளே! உங்களை நேசிக்கும் மனிதர்கள் உங்களை ***விட்டு விலகிச்*** செல்லலாம். ஆனால் உங்கள் தேவனானவர் ***இடுக்கண்*** நிறைந்த ***சூழ்நிலையிலும்*** உங்களை விட்டு விலக மாட்டார். சுனாமி என்ற ***பேரலைகள் அழிவை*** உண்டு பண்ணின நாட்களில் ***தேவ அநுக்கிரகத்தால்*** தனக்கு ***எதிர்க்*** கொண்டு வந்த அலைகள் மறுபுறம் கடந்து சென்றுஒரு ***கர்ப்பிணி பெண் காப்பாற்றப்பட்டதை*** இதற்கு முன் நான் கூறியிருக்கிறேன் அல்லவா? அன்று அந்த ***சுனாமி*** அலைகளிலிருந்து அப் பெண்ணை ***காப்பாற்றிய*** தேவன் இன்றும் ஜீவிக்கிறார். அவரை ***விசுவசிப்பவர்களுக்கு*** அவர் ***அருள் செய்வார்.*** விடுதலை தருவார். ***இன்று ஜெயத்தின் நாள்!***

ஜெபம்

என் தேவனாகிய கர்த்தாவே! உங்கள் அளவில்லாத அன்புக்காய் நன்றி ஆபத்துகள் நிறைந்த கடல் போன்ற வாழ்க்கைப் பயணத்தில் என்னை காத்து விடுதலையைக் கொடுத்து வழி நடத்துங்கள் இன்றும் என்னோடிருந்து என்னை பாதுகாத்தருளும். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்." (நாகூம் 1:7)

ஜீவ மன்னா
பெப்ரவரி 24
திங்கள்

**மனிதன் மத்தியஸ்தனாய் இராதபடி நேரடியாகவே தேவனின் ஆசீர்வாதத்தைப் பெறுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 79 – 80

**"இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள். "** (பரி.மத்தேயு 9:22)

அன்பார்ந்த கர்த்தருக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ளவரும் விசுவாசத்தை துவக்குகிறவரும்** முடிக்கிறவருமான இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தால் **இன்றைய தினத்திலும் சகல நன்மைகளையும் பெற்று மகிழ்ந்திருக்கும்படி வாழ்த்துகின்றேன்.** ஆத்மீக பிள்ளைகளாகிய நாங்களனைவரும் எங்கள் வாழ்வை விசுவாசத்தால் ஜெயம் கொள்ள வேண்டும் ஏனெனில் உலகில் **பாவிகளும் அதர்மவாதிகளுமாய்** இருந்த எம்மை ஜீவனுள்ள தேவனாகிய **இயேசுகிறிஸ்து** அவருடைய பரிசுத்த இரத்தத்தால் **சுத்திகரித்து உத்தமர்களாக** மாற்றினார். அதனால் நாம் பரிசுத்தவான்களாக இருக்கிறோம். விசுவாசத்தினாலே **நீதிமான்** பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் **ஆத்துமா** பிரியமாயிராது என்று **எபிரேயர் 10:38** தேவ வசனம் கூறுகிறது. இதன்படி **விசுவாசத்தில் பெலனடைந்தவர்களாய்** இருப்பதே அவரது விருப்பம்.

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட வேத வசனத்தில் காணப்படும் **ஸ்திரி நோயிலிருந்து** சுகத்தைப் பெறும்படியாய் இயேசுகிறிஸ்துவை நாடினாள். அவரின் **சீடர்களிடம்** எந்த உதவியையும் நாடாது **விசுவாசத்தோடு செயற்பட்டாள்.** அதாவது இயேசுகிறிஸ்துவின் **வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டால்** பன்னிரெண்டு வருடகாலமாக தனக்கிருக்கும் **நோய்** நீங்கி விடும் என **விசுவாசித்து** தன் நினைப்பின்படியே அவரைத் தொடர்ந்து வந்து அவரின் **வஸ்திரத்தின் ஓரத்தை** தொட்டு சுகத்தைப் பெற்றுக் கொண்டாள். இவ் வசனத்தின்படி அவளுடைய **விசுவாசத்தினால் பன்னிரெண்டு** வருடகாலம் **பெரும்பாடுள்ள** நோயாளியாய் இருந்த அந்த ஸ்திரி அந்நேரம் முதல் சுகத்தைப் பெற்றாள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் **இருதயம் கலங்காதிருப்பதாக!** அவள் செய்தது பிழையாக கூட இருந்திருக்கலாம். ஆனால் **ஏன் அவள் அப்படி செய்தாள்?** என்பதை இயேசு அறிவார். ஆகையால் இயேசு அவளை அழைத்து **திடன்கொள்** என்றார். அதுமாத்திரமல்ல அவளுடைய **விசுவாசத்தை பாராட்டி சம்பூரணமான** சுகத்தைப் பெறும்படி செய்தார். அவர் இன்றும் எம்மை **நேசிக்கிறவராய்** இருக்கிறார். நீங்களும் யாரும் **மத்தியஸ்தராய்** இருந்து உங்களுக்காக ஜெபிக்காதபடி நீங்களே **விசுவாசத்தோடு ஜெபித்து** ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் **விசுவாசத்தை** கிரியையில் வெளிப்படுத்துங்கள். **இன்றும் வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! விசுவாசத்தின் பலனைக் காணச் செய்யும்
அற்புதமானவரே, என் நேச இயேசுகிறிஸ்துவே! நீங்களே எப்போதும்
எனக்கு மத்தியஸ்தராய் இருங்கள். மனிதர்களின் மத்தியஸ்தானத்தை
எதிர்பாராதபடி நேரடியாகவே உங்கள் அசீர்வாதத்தை பெற விசுவாசத்தில்
என்னை வழி நடத்தும்படி
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே." (ரோமர் 8:34)

ஜீவ மன்னா
பெப்ரவரி 25
செவ்வாய்

# எம் இருதயத்தின் வேதனையை அறியும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 81 – 82

**“விலகுங்கள், இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப்பார்த்து நகைத்தார்கள்.”** (பரி.மத்தேயு 9:24)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றைய தினம் மகிழ்ச்சியும், மனரம்மியமான இனிய நாளாக அமையும்படி பிரார்த்திக்கின்றேன்.** மனிதர்களின் துக்கத்தை அறிகிற **துயரத்தில்** அருள் புரியும் **சர்வ வல்லமையுள்ள** தேவ பிதாவின் **உரிமையுள்ள** பிள்ளைகளாக விளங்கும் உங்களனைவரையும் குறித்தும் மிக மகிழ்ச்சியடைகிறேன். **மாம்சமான அனைவரினதும்** தெய்வமாகிய **படைப்பின்** தேவனைக் குறித்து அறிந்துக் கொண்ட நாமனைவருமே **பாக்கியவான்களாக** இருக்கிறோம்.

தேவ பிள்ளைகளே! மேலே காணப்படும் வேத வசனம் **பன்னிரெண்டு வயதான யவீரு** என்னும் அதிபதியின் மகள் **நோய்வாய்ப்பட்டு மரித்துப்** போகும் நிலையில் இருக்கிறபடியால் அவர் வந்து அவளை **உயிரடையச்** செய்யுமாறு கேட்டுக் கொண்டபடியால் **இயேசுகிறிஸ்து** அவனோடு அவனுடைய இல்லத்தை நோக்கி கடந்து சென்று கொண்டிருந்த வேளையில் தலைவனுடைய வீட்டிலே **தாரை ஊதுகிறவர்களையும்** இரைகிற ஜனங்களையும் கண்டு நீங்கள் **சந்தடிபண்ணி அழுகிறதென்ன?** விலங்குகள்! இந்தச் **சிறுபெண் மரிக்கவில்லை நித்திரையாயிருக்கிறாள்** என்றார். அப்போது தாரை ஊதுகிறவர்கள், அழுகிற ஜனங்களும் அவரைப் பார்த்து **நகைத்தார்கள்.**

தேவ பிள்ளைகளே! **யவீருவின்** வீட்டில் அழுகிற ஜனங்களைக் கண்டு அவர்களுடைய துக்கத்தினால் இயேசுகிறிஸ்துவின் **உள்ளமும் துக்கப்பட்டது.** தன்னை **விசுவாசித்து** தன்னிடம் தன் ஒரே மகள் **உயிர்பெறும்படியாய்,** நோய் **நீங்கி சுகம் பெறும்படியாய் அருள்** புரியுமாறு கேட்டுக் கொண்ட அந்தத் தகப்பனுடைய **கண்ணீர் விண்ணப்பம்,** இவைகளைக் கண்ட இயேசுகிறிஸ்து தன்னைத் தேடி வந்த அந்தத் தகப்பனுக்கு **மனமிரங்கி** அந்தச் **சிறுமியின்** மரண வேதனை, அந்தப் **பிரிவின் துயரத்தை** தாங்க முடியாது, அழுகிற உறவினர்களின் கண்ணீரை வேதனையையும் கண்டு அப்பிள்ளையை **உயிர்ப்பிக்கும்படியாய்** பிள்ளையின் கையைப் பிடித்து எழுப்பினார். உங்கள் **உள்ளம் கலங்காதிருப்பதாக!** அவர் இன்றும் ஜீவனுள்ளவராய் நம் மத்தியில் கிரியை செய்கிறார். **யவீருவின்** வீட்டாரைப் போல் நீங்களும் அவரின் **வல்லமையைக்** குறித்து குறைவாய் **மதிப்பிடுகிறவர்களாய்** இராதபடி விசுவாசித்து நடவுங்கள். அவரால் எல்லாம் கூடும். உங்கள் **துன்பத்தைக்** கண்டு உங்களுக்கு **அருள் புரியுமாறு** அவர் உங்களை நோக்கிக் கொண்டிருக்கிறார். **விசுவாசித்து** பெற்றுக் கொள்ளுங்கள். இன்று விடுதலையின் நாள், **வெற்றியின் நாள்!**

ஜெபம்

மனதுருக்கமுள்ள இரக்கத்தின் தேவனே! வேதனைகளை அறிகிறவரே! என் உள்ளத்தின் வேதனைகளை உங்களுக்குச் சொல்லி உங்கள் அருளை வேண்டுகிறேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் என்னை விடுவித்து காத்தருளும்படியாக ஜெபிக்கிறேன் . ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.” (சங்கீதம் 46:1)

ஜீவ மன்னா
பெப்ரவரி 26
புதன்

## இரட்டிப்பான ஆசீர்வாதங்களை தரும் தேவன் யெகோவாயீரே !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 83 - 84

**"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்."** (சகரியா 9:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மரித்து உயிர்த்தவரும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமான இயேசு-கிறிஸ்துவின் மகிமை நிறைந்த நாமத்தினால் ஆசீர்வதிக்கிறேன். **இன்றைய தினத்திலும்** சகல காரியங்களிலும் ஜெயத்தை பெற்றுக் கொள்ளுங்கள். ஜீவனுள்ளவர் என அறிந்து அவரை முழு உள்ளத்தோடு விசுவாசித்து சுமார் இரண்டு கோடியே மூன்று இலட்சம் மக்கள் வாழும் இலங்கை தேசத்தில் அவருடைய சொந்த பிள்ளைகளாக திகழும் உங்கள் ஒவ்வொருவரையும் குறித்து தேவனுக்கு நன்றி கூறுகிறேன். அவரை துதிக்கிறேன். அதுமாத்திரமல்ல, அவரின் வார்த்தைகளை விசுவாசித்து மாதந்தோறும் வெளிவரும் **ஜீவ மன்னா சஞ்சிகையை** பெற்றுக் கொண்டு அதை மிக **ஆவலுடன்** வாசிக்கும் உங்கள் யாவரையும் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட வேதாகமத்தின் வார்த்தைகள் **நம்பிக்கையுடைய சிறைகளே அரணுக்குத் திரும்புங்கள் என்பதாக** கூறுகின்றது. இரட்டிப்பான நன்மையைத் தருவேன். இன்றைய தினத்தில் நீங்கள் வியாகுலத்தின் மத்தியிலும் சங்கடங்கள் மத்தியிலும் ஜீவிப்பவராக இருக்கலாம். ஏன் தொழில் பிரச்சினை, பிள்ளைகளின் பிரச்சினைகள், மத்தியில் ஜீவிப்பராகவும் இருக்கலாம். குடும்ப பிரச்சினை, பிரிவினைகள், ஆகியவற்றால் மிக வேதனை அடைந்தவராக இருக்கலாம். இச் சகல பிரச்சினைகளிலிருந்து விடுதலை தேவைப்படலாம் நீங்களும் மேலே தரப்பட்ட வேத வாக்கியத்தின்படி எதிர்பார்ப்புள்ள நம்பிக்கையுடைய கைதியைப் போல் இருக்கிறீர்கள் அல்லவா? ஆயினும் **உங்கள் இருதயம்** கலங்காதிருப்பதாக! உங்கள் தேவன் உங்களுக்கு பலத்த கோட்டையாயிருக்கிறார். நீங்கள் அவரிடம் திரும்பும் போது உங்களை அவர் பாதுகாத்து உங்களை சாத்தானுடைய கட்டுகளில் இருந்து விடுவிப்பார்.

தேவ பிள்ளைகளே! அதுமாத்திரமல்ல தேவன் இரு மடங்காய் ஆசீர்வதிப்பதாக வாக்கு கொடுத்துள்ளார். நீங்கள் நன்றாக ஜெபம் செய்து தேவனுக்கு பிரியமாக வாழ்க்கை நடத்துங்கள். இன்று முதல் உங்களுக்கு இரட்டிப்பான நன்மை கிடைக்கச்செய்வார். **இன்று நல்ல நாள், வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! சகலமும் எம் நன்மைக்கேதுவாக செய்யும் நல்ல தகப்பனே! எனக்கு இரட்டிப்பான ஆசீர்வாதம் தருவேன் என்றவரே! நான் உங்களிடம் திரும்புகிறேன். என் கோட்டையாகிய தேவனே எனக்கு இரட்டிப்பான நன்மை கிடைக்கச் செய்தருளும் . ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்." (ஏசாயா 61:7)

ஜீவ மன்னா
பெப்ரவரி **27**
வியாழன்

## உமக்கு ஒப்பானவர் யார்?

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 85 – 86

**"கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?"**
(யாத்தராகமம் 15:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் இராஜரீகம் செய்கிறவரும் **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால்,** இன்றும் தேவ கிருபையுடன் கூடிய **நன்மையான நாளைப் பெற்று மகிழ்ந்திருக்கும்படியாய் வாழ்த்துகின்றேன். தன்நிகரில்லாதவரும் மகா உன்னதரும், பரிசுத்தரும், உயர்ந்தவருமான** சர்வ வல்லமை பொருந்திய எம்மை படைத்த பரலோக தகப்பனின் பிள்ளையாக மாறும் **சிலாக்கியத்தை** பெற்ற நாமனைவரும் மகா **பாக்கியவான்களே!** ஏனெனில் அவர் அவருடைய மக்களை ஒரு போதும் **புறம்பே தள்ளுவதில்லை.**

தேவனுடையவர்களே! அது மாத்திரமல்ல அவர் எமது சுயகௌரவத்தை காத்துக் கொள்ள விரும்புகிறவர். ஆதலால் அவரது பிள்ளைகள் இப் பூலோகத்தில் **வெட்கப்பட்டு** போக விடாதபடி அவர்களுடைய வாழ்க்கையின் தேவைகள் யாவற்றையும் ஏற்ற காலத்தில் நிறைவேற்றி சகலவற்றிலும் **வெற்றியைத்** தருவார். இச்செய்தியின் முதல் காணப்படும் வேத வாக்கியம் **யாத்திரகாமம் 15:11** இல் மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் **கர்த்தரை புகழ்ந்து** பாடின பாட்டின் ஒரு பகுதியையே காண்கிறீர்கள். அதில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தாவே **தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?** என்று. **மோசேயின்** தேவனும் **இஸ்ரவேலின்** தேவனும் ஆகிய **சேனைகளின் கர்த்தர்** என்னும் நாமத்தைக் கொண்டவருமான கர்த்தர் உங்கள் ஆண்டவராயிருக்கிறார். உங்கள் இருதயம் **கலங்காதிருப்பதாக!** அவர் செங்கடலை பிளந்து அவருடைய மக்களை **எகிப்திலிருந்து** வெளியே கொண்டு வந்தவரும் **யோர்தானில்** பாதையை உருவாக்கி கானான் தேசத்தை நோக்கி தம் ஜனங்களை வழிநடத்தினவருமான **பராக்கிரமுள்ள** தேவன்.

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்விலே நீங்கள் **சந்திக்கும் துன்ப, துயரங்கள், பிரச்சினைகள்,** அநேக பாதிப்புகள் தடைகள் ஆகையால் வாழ்க்கையிலே முன்னேற்றத்தை நோக்கி எப்படிச் செல்வது? என்று எண்ணி **கலங்க வேண்டாம்.** தேவனால் சொல்லப்பட்ட ஒரு வார்த்தையும் **வல்லமையற்றதல்ல** என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் எம் ஒவ்வொருவரைக் குறித்தும் அவரால் நியமிக்கப்பட்ட **சித்தம், திட்டம்** யாவும் ஏற்ற வேளையில் நடக்கும் என்பது **நிச்சயம்** உங்கள் தேவனுக்கு **சமனான** வேறு எவரும் கிடையாது. இஸ்ரவேலின் **வல்லமையுள்ள** தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். என்பதை நினைவிற் கொண்டு **பெலன்** கொள்ளுங்கள். **வெற்றிப்** பெறுங்கள். **இன்றைய நாள் ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உமக்கு ஒப்பானவர் இந்தப் பூமியிலே ஒருவருமில்லை! என் இயேசுவே எங்கள் வாழ்க்கையின் பயணத்தின் முன்னேற்றத்தை காண முடியாதபடிக்கு அநேக தடைகள் இருக்கிறதா? என் தேவனே! செங்கடலை பிளந்து பாதையை உருவாக்கி அதன் மேல் உம் ஜனங்களை அழைத்துக் கொண்டு வந்தவரே! எங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தின் தடைகளையெல்லாம் நீக்கி எங்களை வழி நடத்த வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை." (ஏசாயா 46:9)

ஜீவ மன்னா
பெப்ரவரி **28**
வெள்ளி

## நல்ல மேய்ப்பன் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 87 – 88

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்."**
(சங்கீதம் 23:1)

அன்பு நிறைந்தவர்களும், தேவ கிருபை பெற்றவர்களுமான தேவ பிள்ளைகளே! **புதிய நாளில் இனிமையான காலைப் பொழுதினில் ஜீவிக்கின்ற இயேசுவின் வல்லமையான நாமத்தினால் வாழ்த்துகின்றேன்.** இம் மாத இறுதி தினத்தில் **அதிகாலை** துதி ஸ்தோத்திரங்களை பரிசுத்தர் பாதத்தில் சமர்பித்து தேவ கிருபையை பெற்றுக் கொண்டவர்களே! இன்றைய **ஜீவ மன்னா** செய்திக்கூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மனித சமூகத்தில் வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் **வித்தியாசமான குண இயல்புடையவர்களாய்** இருக்கிறார்கள். **பெரும்பாலும்** மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனிதர்கள் உதவி பெறுபவர் மூலம் தமக்கு ஏதாவது **இலாபம், பிரயோஜனம்** கிடைக்குமா என உள்ளத்தில் சிந்தனை செய்கிறார்கள். தன்னலம் மிக்க **உள்ளமுடையவர்களாய்** இருக்கிறார்கள். ஆயினும் உங்கள் **உள்ளம் கலங்காதிருப்பதாக**! உங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களின் நல்ல மேய்ப்பராய் இருக்கிறார்.

மேலே தரப்பட்ட வேத வசனம் கூறுகிறது கர்த்தர் உங்கள் **மேய்ப்பராயிருக்கிறார்** என்றும் ஆகையால் நீங்கள் **தாழ்ச்சியடைவதில்லை** என்பதாக. மேய்ப்பனுடைய பொறுப்பு அவனுடைய ஆடுகளை **மேய்ப்பதே.** எப்போதும் **பசும் புல் தரைகளையும்** குடிப்பதற்கு **அமர்ந்த தண்ணீர்கள்** அண்டையில் அவைகளை நடத்திச் செல்வான். அதுமாத்திரமல்ல அவைகளின் **எதிரிகளிடம்** இருந்து பாதுகாப்பதும் அவனது **கடமையாகும்.** நாங்கள் ஒவ்வொருவரும் அவருடைய ஆடுகளாய் இருக்கிறோம். என் **மந்தையும்** என் **மேய்ச்சலின் ஆடுகளும் மனிதர்களாகிய** நீங்கள். நான் உங்கள் தேவன், என்று ஆண்டவர் **உரைக்கிறார்.** என்று **வேதவசனம்** கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஒருவரும் தேவனைக் குறித்து அறிந்திருக்கவில்லை. ஆயினும் அவருடைய **சுயசித்தத்தின்படி** அவருடைய பிள்ளையாக உலகத்திலிருந்து உங்களை **வேறுபடுத்திக்** கொண்டார். உங்கள் வாழ்விலிருந்து **பாவம்** என்னும் **எதிரியிடமிருந்து** உங்களை மீட்கும்படியாய் தம்மையே **பலியாக ஒப்புக்** கொடுத்தார். உங்களைத் தெரிந்துக் கொண்டு **தனது பிள்ளையாக** மாற்றி உங்கள் வாழ்க்கையை **பொறுப்பேற்று** உங்கள் தேவைகள் யாவையையும் நிறைவேற்றுகிறார். ஏற்ற வேளையில் **சரியானவற்றை** கொடுத்து **பாதுகாப்போடு** உங்களை முன்னோக்கிக் **நடக்கப்பண்ணுகிறார்.** ஆகையால் உங்கள் வாழ்வின் சகல **பிரச்சினைகள், துன்பங்கள், வேதனைகள்,** எவைகளை சந்திக்க நேர்ந்தாலும் **கவலைப்படாதீர்கள்.** நீங்கள் ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக ஜீவிப்பதே தேவனுடைய விருப்பம் இன்றும் உங்களுக்கு எந்த விதமான **பற்றாக்குறை, தாழ்ச்சி** ஏற்படாது. **இன்று ஜெயத்தின் ஆசீர்வாதமான நாள்**!

ஜெபம்

என் நேசத் தகப்பனே என் நல்ல மேய்ப்பனாக இருப்பவரே! என்னை போஷிக்கிவரும், காக்கிறவரும் மானவரே! பசுமையையும் தெளிந்ததையும் எனக்கு கொடுக்கிறபடியால் நன்றி கூறுகிறேன். இன்றைய தினமும் உங்கள் ஆசீர்வாதம் என்னை வந்தடைவதால் நன்றி . ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32)

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## தெய்வீக அருள்பெற திரையில் கை வைப்போம் CD க்கூடாக பித்தப்பையின் கற்கள் மறைந்தன!



நிலுகா பெரேரா
கிரிவன்துடுவ

நான் டுபாய் நாட்டிற்கு போய் 10 மாதமளவில் வயிற்றில் அதிகமான வேதனை ஏற்பட்டதன் நிமித்தம் வைத்திய பரிகாரம் பெற்றுக் கொள்ளும்படியாகச் சென்றேன். வைத்திய பரிகாரத்தின் பின்னதாக பித்தப்பையில் பல கற்கள் இருப்பதாகவும் ஒரு கல் இறுகி இருப்பதாகவும் கூறினார்கள். பின்னர் இறுகியுள்ள கல்லை சத்திரச் சிகிச்சை மூலமாக அகற்றினார்கள். அத்தோடு மற்ற கற்களை அகற்ற முழு பித்தப்பையையும் அகற்ற வேண்டுமென்று வைத்தியர்கள் தீர்மானித்தார்கள்.

இலங்கைக்கு வந்து வைத்திய பரிகாரம் பெறும்படியாக "ஆசிரி" எனும் தனியார் வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கேயும் பித்தப்பையை அகற்றப்பட வேண்டும் என்றார்கள். இதற்கிடையில் இயேசு கைவிடார் தெய்வீக விடுதலை ஆராதனைப் பற்றி அறிந்து அதில் ஒரு நாள் பங்கு பற்றினேன். அதன் பிறகு வெளிநாட்டிற்கு போக வேண்டியிருந்தது. அங்கே நான்கு மாதங்களுக்குப் பின்னர் மீண்டுமாக வயிற்றுவலி ஏற்பட்டது. 3 நாட்களாக எவ்விதமான ஆகாரமும் உண்ண முடியவில்லை. அப்பொழுது என்னிடமிருந்த தெய்வீக அருள்பெற திரையில் கை வைப்போம் என்ற CDயை போட்டு பின் திரையில் கை வைத்த போது பரிபூரண விடுதலையை பெற்றதோடு ஆகாரமும் உட்கொண்டேன். வயிற்று வலியிலிருந்து பூரண சுகம் பெற்றேன். மீண்டுமாக இலங்கை வந்து ஆசிரி எனும் தனியார் வைத்தியசாலையில் வைத்திய பரிசீலனை செய்த போது பித்தப்பையில் கல் இல்லையெனக் கூறினார்கள். பித்தப்பையில் கற்களை அகற்றி என்னை குணப்படுத்திய இயேசுவுக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



நோயாளி வைத்திய சான்றிதலோடு சாட்சி கொடுக்கிறார்

## 4 வருட மார்பக புற்று நோய் சுகம்!



S.இலங்ககோன்
கோகியான

4 வருடங்களுக்கு முன்பு எனது வலது பக்க மார்பகத்தில் கட்டியொன்று ஏற்பட்டது. பின்னர் நான் வைத்திய பரிகாரம் பெற்றுக் கொள்ளும்படியாக சென்ற பின்பு அது புற்று நோய் என்பதனை நான் அறிந்துக்கொண்டேன். என்னுடைய வலது மார்பகம் சத்திரசிகிச்சையில் பூரணமாக அகற்றப்பட்டது. ஆனாலும் எனது உடம்பில் புற்று நோய் அணுக்கள் இருக்கின்றது என வைத்தியர்கள் கூறினார்கள். அதன் பிறகு 25 நாட்கள் இடைநிறுத்தாது மின்சார சிகிச்சை கொடுக்கப்பட்டது. நான்கு மாதத்திற்கு ஒருமுறையும், வருடத்திற்கொரு முறையுமாக வைத்திய பரிகாரத்திற்குட்படுத்தப்பட்டேன். அப்பொழுதும் சிறு மாற்றமும் ஏற்படவில்லை.

என்னுடைய சகோதரிக்கூடாக சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையை அறிந்து 4 கிழமைகள் கலந்து கொண்டதன் பின்னர் வைத்தியரிடம் சென்ற போது புற்று நோய் இப்போது உடம்பில் இல்லையென உறுதிப்படுத்தினார். 4 வருடமாகவிருந்த மரணத்தரு-வாய்கேதுவான புற்று நோயினின்று சுகப்படுத்திய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!



நோயாளி வைத்திய சான்றிதலோடு சாட்சி கொடுக்கிறார்




# அட்டைப் பட விளக்கம்

அன்பார்ந்தவர்களே! 2014ம் ஆண்டு எங்கள் தேவனாகிய கர்த்தரின் மகிமை எங்கள் தேசத்தின் மேல் உதித்து ஒளி வீசும்படியாக இவ்வாண்டின் தேவ இராஜ்ஜியமானது எழும்பிப் பிரகாசிப்பதற்கான மாறுதல்கள் சபைகளில் ஏற்படப் போகின்றதென்ற இச் செய்தியை காண்கின்ற எல்லா ஆவிக்குரிய சபைகளிலும் 2014ல் புதிய வருடமானது தேவ ஆவியில் பிரகாசிக்கின்றதென்று பிரகடனப் படுத்துவீர்களாயின் தேவன் தேசத்திற்குள் ஒரு மாற்றத்தை உருவாக்குவார் என நான் விசுவசிக்கின்றேன்.

ஏனென்றால் பரிசுத்த வேதாகமத்தில் எண்ணாகமம் 27 இல் கூறியுள்ளதன்படி செலோப்பியாத்தின் குமாரத்திகள் மோசேயிடம் தனது தந்தையின் சகோதரிக்குள்ளே எங்களுக்குள் காணியாட்சி கொடுக்க வேண்டும் என்றார்கள். மோசே அவர்களுடைய நியாயத்தைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனான். அப்போது தேவன் அவர்களது வேண்டுகோளை நிறைவேற்றும்படியாக தேவன் மோசேயிடம் கூறினார். அவ்வண்ணமே தேவன் சொதோம் கோமோராவை அழிப்பதற்கு ஆயத்தப்படுகையில் ஆபிரகாம் தேவனிடம் நெருங்கி நீதிமான்கள் 50 பேர் தொடங்கி 10 பேராக குறைந்து காணப்படினும் பட்டணத்தை அழிப்பீரோ எனக் கேட்டார்? அதற்கு அவர் பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என பதிலுரைத்தார். இன்னுமாக புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனாகிய இயேசுகிறிஸ்துவிடம் சீடர்கள் பல வேளைகளில் பரலோக செய்திகளைக் குறித்து விளக்கங்கள் கேட்ட போது தேவன் சீடர்களுக்கு அதைக் குறித்து மிகவும் தெளிவாகக் கூறினார். இன்னுமாக நூற்றுக்கதிபதி தன் வேலைக்காரன் திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக் கொண்டான். வீட்டிலிருக்கும் அவனது வேலைக்காரன் குணமாக ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்படியாகக் கேட்கிறான். அவர் நூற்றுக்கதிபதிக்கு பதில் கொடுக்கின்றார்.

அட்டைப் படத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஏசாயா 60:1 இன் தேவ வசனத்திலே ஆவியில் எழும்பிப் பிரகாசிக்கும் வருடமாக்கித் தாருங்கள் என்று தேவனிடம் நாம் கேட்கும் போது தேவன் எங்களுக்கு நல்லதொரு சுபீட்சமான காரியத்தை வாய்க்கப் பண்ணாமல் இருக்கமாட்டார். எருசலேமே உன் மதில்களின் மேல் பகல் முழுவதும் இராமுழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராது ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. அவர் எருசலேமே ஸ்திரப்படுத்தி பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமாந்திருக்க விடாதிருங்கள். என்று ஏசாயா 62:6-7 இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் ஆவிக்குரிய பிள்ளைகளே, உங்கள் தலைமைப் போதகருக்கு இதைக் குறித்து அறிவியுங்கள். இதைக் குறித்து ஜீவ மன்னா வாசகர்களின் ஒரு மனப்பாட்டை வரவேற்கின்றோம் இவ்வருடத்திற்குள் தேவன் எமது தேசத்தில் பெரிதான காரியங்களை நிறைவேற்றுவாராக!

இயேசுகிறிஸ்து உங்களோடு இருப்பாராக!!!

## இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!!!



29 வது வெளியீடு

போதகர் ஏ.ஜே.ஜோசப்


ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

விலாசத்தை அனுப்பவும்

R/N:- CME/003/12/NPO



இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

011-2334865 0714-922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org



இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.